02 - 98
27-08-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=


# Saturday மெயில்

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
29 AUG 2011

## பாலியல் சுற்றுலா தலைநகரான தாய்லாந்தின் புதிய முயற்சி




அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

பாலிய...

உலகின் பாலியல் சுற்றுலா தலைநகர் என்ற பெயர் வாங்கியுள்ள தாய்லாந்து அந்தப் பெயரை 'கழற்றிவிட' பெரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

பாலியல் சுற்றுலா தலைநகர் என்ற பெயருக்குப் பதிலாக குடும்பச் சுற்றுலா தலைநகர் என்ற பெயரைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டுக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் கோவா தலைநகர் பனாஜியில் நடந்த தாய்லாந்து சுற்றுலா மேம்பாட்டு விழாவில் பேசிய அந்நாட்டுத் தூதர் டாம்விட் ஜோன்சன்,நாங்கள் என்ன பெயரை (பாலியல் சுற்றுலா தலைநகர்) வாங்கியிருக்கிறோம் என்பது எங்களுக்கும் உங்களுக்கும் நன்றாகவே தெரியும். அதிலிருந்து விடுபடப் பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது.

விரைவிலேயே குடும்ப சுற்றுலா தலைநகர் என்ற பெயரை வாங்கிக் காட்டுவோம். அதற்காகத்தான் உலகம் முழுவதும் இது போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து தாய்லாந்தில் குடும்பத்தோடு கண்டுகளிக்கக் கூடிய இடங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம் என்றார்.

தாய்லாந்து போன்ற இடங்களில் விபசாரத் தொழில் அந்நாடுகளின் பொருளாதாரத்தில் 'முக்கிய பங்கு வகிக்கிறது. 2004 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு எண்ணிக்கைப் பட்டியல் அவ்வாண்டு தாய்லாந்தில் 2.8 மில்லியன் பாலியல் தொழிலாளிகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. அதில் இரண்டு மில்லியன் பெண்களும் 20 ஆயிரம் ஆண் பாலியல் தொழிலாளிகளும் 8 இலட்சம் பேர் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுமாவர்.

புத்த மத நாடான தாய்லாந்து பாலியல் சுற்றுலாவிற்குப் பெயர் போனதாக விளங்குகிறது. பொருளாதார வளர்ச்சியின் முன்மாதிரியாக முன்பெல்லாம் குறிப்பிடப்பட்ட தாய்லாந்து 2006-2007 ஆம் ஆண்டுகளில் இராணுவ ஆட்சியில் பிடிபட்டது. அரசியல் கட்சிகளின் இயக்கங்கள் தடை செய்யப்பட்டன.90 களின் இறுதியில் பொருளாதாரச் சிக்கல்களின் பெரும் பள்ளத்திலிருந்து மீண்டது. இந்தியா,சீனா மற்றும் ஆசிய நாடுகளின் கலாசாரத் தாக்கத்தாலும் புத்த மதத்தின் பின்பற்றலாலும் கீழ்ப் படிந்திருந்த தாய்லாந்தில் 2500 ஆண்டுகால புத்தமத போதனைகள் அந்த நாட்டை எந்த வகையிலும் பாலியல் விபசாரத்திலிருந்து மீட்டு விடவில்லை. புத்த போதனைகள் ஒரு எல்லையில் நின்று வேடிக்கை பார்க்கிறது என்று சொல்லப்படுவதுண்டு.

வறுமை ஒரு வகையில் தாய் கிராமப் பெண்களையும் சிறுமிகளையும் விபசாரத்துக்கு தள்ளிவிட்டது. அதிலிருந்து அவர்களை மீட்டெடுக்க புத்தமதத் துறவிகளை விடத் தன்னார்வக் குழுக்கள்தான் அதிகளவு செயல்பாடுகளில் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். மத்திய வழி என்றொரு போதனை புத்தமதத்தில் இருக்கிறது. அந்தப் போதனைகூட விபசாரத்தை வெகுவாகக் கண்டிப்பதில்லை என்கிறார்கள்.

உலகின் 50 ஆவது பெரியநாடு அரிசியை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதன்மையானது. உலகின் சிறந்த குடும்பப் பொறுப்பான மனைவிகள் உள்ள நாடு என்ற பெருமைகளை மீறி பாங்கொக் போன்ற நகரங்களின் மற்ற உள் கிராமங்களின் விபசாரம் இன்னொரு வகை நிலையின் குறியீடாகவும் இருக்கிறது.



# வௌவால் ரகசியம்



வௌவால்கள் எவ்வாறு திசைகளைக் கண்டுபிடித்து பறக்கின்றன என்பதை கண்டறிய ஒரு ஜி.பி.எஸ்.கருவியை ஜெருஸ்ஸலம் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.தங்களது இலக்குகளைத் திறம்பட நிர்ணயம் செய்வதில் வீட்டுப் புறாக்களை விட பழ வௌவால்கள் திறமையானவை என இவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

எகிப்திலுள்ள பழ வௌவால்கள்,மலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புகளில் தெரியும் வெளிச்சம் போன்றவற்றை அடையாளமாக வைத்தே வேறிடத்துக்குச் செல்லவோ அல்லது மீண்டும் அதே இடத்துக்கு திரும்பி வரவோ செய்கின்றனவாம்.வெளிச்சம் இல்லாத காலங்களில் அவை ஏதோ ஒரு உள்ளுணர்வின் அடிப்படையில் தங்களது இலக்குகளை மிக துல்லியமாக கணிக்கும் ஆற்றல் பெற்றவை என இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சில வௌவால்களின் மீது ஒரு ஜி.பி.எஸ்.கருவியை இணைத்து அவற்றை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பறக்கவிட்டார்கள்.அவை சுமார் 25 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஒரு பழ மரத்திற்கு பறந்து சென்று மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்தன.அதிசயமாக அதே போன்ற பழ மரங்கள் வௌவால்கள் பறந்து சென்ற வழியில் வெகு அருகில் இருந்தாலும் அவை தாங்கள் வழக்கமாக செல்லும் ஒரு குறிப்பிட்ட மரத்திற்கே சென்று வந்தது தெரிய வந்தது.

இன்னும் சுவாரசியமாக பட்டினியாய் சிலவற்றையும் இரையெடுத்த சில வௌவால்களையும் தங்களது இருப்பிடத்தைவிட்டு வெகு தொலைவுக்குக் கொண்டு சென்றுபறக்க விட்ட போது இரையெடுத்தவை தங்களது சரியான இருப்பிடத்துக்கும் பட்டினியாய் இருந்தவை வழக்கமாக செல்லும் பழ மரங்களுக்குச் சென்று பின்னர் தங்களது இருப்பிடத்துக்குத் திரும்பியதும் கண்டுபிடிக்கப்பட்டது.



# சிலந்திகளின் காதல்

பூச்சி இனத்தைச் சேர்ந்த சிலந்தியின் இனப்பெருக்கம் சற்று வித்தியாசமானது.இவற்றுள் பருவத்திற்கு வந்த ஆண் சிலந்திகள் பெண் சிலந்தியைத் தேடிச் செல்கின்றன.அதனை கண்டவுடன் இனப்பெருக்கம் நடைபெற்று விடுவதில்லை.முதலில் பெண் சிலந்தியின் வலையை ஆண் சிலந்தி தனது காலால் மெல்லத் தட்டுகிறது.அதற்கேற்ப பெண் சிலந்தியிடம் இருந்து பதில் வந்தவுடன் ஆண் சிலந்தி இனப்பெருக்கத்திற்கு உரிய சில அங்க அசைவுகளை செய்கிறது.அதில் ஈர்க்கப்படும் பெண் சிலந்தியுடன் ஆண் சிலந்தி ஒன்றாய் கூடுகிறது.எனினும் சில சமயங்களில் இனப்பெருக்கம் முடிந்தவுடன் பெண் சிலந்தி ஆண் சிலந்தியை கொன்று விடுகிறது.

இந்த நிலை நீடித்தால் அந்த சிலந்தியின் இனமே பிற்காலத்தில் இல்லாத வாய்ப்பு ஏற்பட்டு விடும்.இதை தவிர்த்து அவை எவ்வாறு வாழ்கின்றன என கலிபோர்னிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோனாதன் ப்ரூட் மற்றும் அவரது சகாக்கள் ஆய்வில் ஈடுபட்டனர்.அதற்காக ஆய்வகத்தில் இனப்பெருக்கத்திற்கு தயாரான நிலையிலுள்ள சில இளம் சிலந்திகளை ஜோடியாக விட்டனர்.சில இளஞ்சிலந்திகளை தனியாக வைத்திருந்தனர்.இனப்பெருக்கத்திற்கு உரிய பருவத்தில் சிலந்திகளில் ஒரு ஜோடி மிக வேகமாக தங்களுக்குள் ஒன்றாக கூடின.இந்த வேகம் தங்களது சரியான ஜோடியை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல அவ்வாறு இல்லாவிட்டால் வேறு சிலந்தியால் குறிக்கிடப்பட வாய்ப்பு உள்ளது.அதை தவிர்ப்பதற்காக தான் மேலும் அதி விரைவாகச் செயல்படுவதால் அது ஜோடிகளுக்குப் பாதுகாப்பினை தருகிறது.இந்த கூடுதலில் பெண் சிலந்திக்கு ஏதேனும் நன்மை ஏற்படுகிறதா என ஆராய்ந்ததில் ஆம் என்பதே பதிலாக இருந்தது.ஜோடிகள் ஒன்றாக கூடும் இந்த நிகழ்வில் ஆண் சிலந்தி சாதனை செய்த பெரியவராகி விடுகிறது.மேலும் வேறு சிலந்தியினால் தொல்லை ஏற்படுவதில் இருந்த விடுபட்டு போதுமான பாதுகாப்பும் ஏற்பட ஏதுவாகிறது என ஆய்வாளர் ப்ரூட் தெரிவித்தார்.


280811-1.indd 2

# அதிசய குகை

போருக்குப் புகழ் பெற்ற வியட்நாமில் அதிசயங்களுக்கும் பஞ்சம் இல்லை. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அங்கு உருவாக்கப்பட்ட குகை தற்போது பிரிட்டன் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அடர்ந்த வனப் பகுதியில் யாருடைய கண்களுக்கும் தட்டுப்படாத இந்த அதிசய குகை, 4.5 கி.மீ.நீளமுடையது. உலகின் மிகப் பெரிய குகைப் பாதையாக இது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 80 மீற்றர், அகலமும் 80 மீற்றர் ஓங்கி உயர்ந்து நிற்கும் மலைகளைக் குடைந்து இந்த குகை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குகைக்குள் பல அதிசயங்கள் நிரம்பியுள்ளன.

சல சலத்து ஓடும் சிறிய ஆறு திரும்பும் பக்கம் எல்லாம் பச்சைப் போர்வை போர்த்தியது போல் காணப்படும் புல்வெளிகள், அடர்ந்த மரங்கள், பேரிரைச்சலுடன் விழும் அருவி என இந்தக் குகையின் அழகு பரவசப்படுத்துகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்பே உள்ளூர்வாசி ஒருவர் இந்தக் குகையின் நுழைவாயிலை கண்டுபிடித்துள்ளார். உள்ளே நுழைய முயற்சித்தபோது, குகைக்குள் இருந்து வந்த மர்ம ஒலியைக் கேட்டு பயந்து ஓடி வந்து விட்டார். இதற்குப் பின் யாருமே அந்த குகை இருக்கும் பக்கம் போவது இல்லை.தற்போது பிரிட்டன் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் குகையின் முழு விபரத்தையும் உலகின் பார்வைக்கு கொண்டு வந்துள்ளனர்.



# ஜப்பானியர்களின் முன் மாதிரி



சமீபத்தில், ஜப்பானில் ஏற்பட்ட நில நடுக்கமும் க்டல்கோளும் அந்த நாட்டின் பொருளாதாரத்தையே சீர்குலைத்துவிட்டது. அணு மின் நிலையங்களுக்குள் கடல் நீர் புகுந்ததால் அங்கிருந்து கதிர் வீச்சு பரவி சுற்றுச் சூழலுக்கு பெரும் கேட்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.இதன் காரணமாக அங்கு கடுமையான மின் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற விடயங்களில் மற்ற நாடுகளுக்கு எப்போதுமே முன் மாதிரியாக செயற்படும் ஜப்பானியர்கள் இந்த விடயத்திலும் அந்தப் போக்கை பின்பற்றத் தொடங்கி விட்டனர். சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும் மின்சாரத்தை சேமிக்கும் வகையிலுமான நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இதன் ஒரு பகுதியாக அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் குளிர்சாதன வசதி பயன்பாட்டை குறைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளனர். குளிர்சாதன வசதி இல்லாத நேரத்தில் எப்படி இருப்பது என்பதற்கும் சில ஆலோசனைகளை ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது.

அலுவலகங்களில் வேலை பார்க்கும் ஊழியர்கள், சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பான,காற்றோட்டமான உடைகளை அணிந்து வரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இறுக்கம் இல்லாத ரீ-ஷேர்ட், ஜீன்ஸ் போன்ற உடைகளை அணிந்து வருவதற்கு ஊழியர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கழுத்தில் 'டை' அணிந்து வருவதை தவிர்க்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெண் ஊழியர்கள், கால்கள் முழுவதும் மறைக்கும் வகையிலான 'ஷூ'க்களை அணிய வேண்டாம் என்றும் சாதாரண செருப்பு மற்றும் ஷூக்களை அணிந்து வரும்படியும் கூறப்பட்டுள்ளது. இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'கேட்வாக்' நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம், 15 சதவீத மின்சாரத்தை சேமிக்க முடியும் என்கின்றனர் ஜப்பான் அதிகாரிகள்.

தங்கள் மீது அணுகுண்டு வீசப்பட்டபோதே, அசராமல் எழுந்து நின்று சாதித்துக் காட்டிய தன்னம்பிக்கை மிக்கவர்கள் ஜப்பானியர்கள். அவர்களை இந்தக் கடல்கோள் என்ன செய்து விடும்?

# பேய்களை விரட்டும் திருவிழா

சீனாவின் யுனான் மாகாணத்தில் இஜா என்ற சிறிய நகரம் உள்ளது. இங்குள்ளவர்கள் ஆகஸ்ட் மாதத்தை 'பேய்கள் மாதம்' ஆக கடைப்பிடிக்கின்றனர்.இந்த மாதம் 14 ஆம், 15 ஆம்,16 ஆம் ஆகிய திகதிகளில் பெண்களின் மார்புகளைத் தொடும் திருவிழா இங்கு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

கி.பி. 581–619 களில் சீனாவை சுயி அரச வம்சத்தினர் ஆண்டு வந்தனர். அப்போது திருமணமாகாத ஏராளமான இளவயது ஆண்களை, இந்த அரச வம்சத்தினர் தங்கள் படைகளில் கட்டாயப்படுத்தி இணைத்துக் கொண்டனர். இவர்களில் பலர் திருமணம் ஆகாமலேயே போர்களில் மடிந்து விட்டனர். இவர்களின் ஆன்மாக்கள் சாந்தியடையாமல் ஆவிகள் உலகத்தில் வலம் வருவதாகவும் ஆண்டு தோறும் பேய் மாதத்தில் இந்த ஆவிகள் பூமிக்கு வந்து திருமணம் ஆகாத இளம் பெண்கள் பத்து பேரின் உட



லுக்குள் புகுந்து விடுவதாகவும் இங்குள்ள மக்கள் நம்புகின்றனர்.

இந்த ஆவிகளிடம் இருந்து தங்களை காத்துக் கொள்ளும் வகையில் இந்த ஊரில் உள்ள திருமணம் ஆகாத பெண்கள், தங்கள் மார்புகளை ஆண்கள் தொடுவதற்கு விருப்பம் தெரிவிக்கின்றனர். இவ்வாறு நிகழ்வதன் மூலம் கெட்ட ஆவிகள் தங்களை தொந்தரவு செய்யாது என்பது பெண்களின் நம்பிக்கை. இதற்காகவே மேலே கூறிய மூன்று நாட்களில் இந்த 'விசித்தர திருவிழா' இஜா நகரில் விமர்சையாக நடைபெறுகிறது. இது மூட நம்பிக்கை என தற்போது விமர்சனம் எழுந்தாலும் சீன மக்கள் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் இந்த விழாவை பாரம்பரியமாகக் கொண்டாடி வருகின்றனர்.

# ஹிட்லரின் மதுக்கோப்பைகள்

ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லரைப் பற்றித் தெரியாதவர்கள் அதிகம் இருக்க முடியாது. கொடுங்கோல் ஆட்சி நடத்தி சரித்திரத்தின் கறுப்புப் பக்கங்களில் இடம்பெற்ற நபர்.

ஹிட்லர் என்ற பெயரைக் கேட்டாலே உலக நாடுகள் அஞ்சி நடுங்கின. இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது. 1945 இல் எதிரிப் படைகளின் கண்களில்பட்டு விடக் கூடாது என்பதற்காக ஹிட்லர் ஜெர்மனியில் விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழியில் தங்கியிருந்தார். அப்போது மது குடிப்பதற்காக பிரத்தியேகமான கண்ணாடி கோப்பைகளை பயன்படுத்தினார். இந்தக் கோப்பைகளில் நான்கு மட்டும் எப்படியோ சிலரின் கைகளுக்கு கிடைத்து விட்டது. இதைப் பொக்கிஷமாக பாதுகாத்து வந்தனர். இந்த கோப்பைகளின் மேல் விளிம்பில் தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. நாஜிப் படைகளின் சின்னமாக கருதப்படும் கழுகு மற்றும் ஸ்வஸ்திக் ஆகியவற்றின் உருவங்கள் இந்தக் கோப்பைகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் இந்தக்கோப்பைகள் ஏலம் விடப்பட்டன. ஆனால், இதை ஏலம் எடுக்க யாரும் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.இறுதியில் சுவீடனைச் சேர்ந்த ஒருவர் நான்கு கோப்பைகளையும் ஒரு



இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். வழக்கமாக, பழங்காலத்தைய சாதாரண பொருட்கள் கூட பல இலட்சம் ரூபாவுக்கு ஏலம் போகும். ஆனால், ஹிட்லர் பயன்படுத்திய கோப்பைகள் இவ்வளவு குறைவாக ஏலம் போனது ஆச்சரியமாக உள்ளது என்கின்றனர் ஏலம் நடத்தியவர்கள்.

LIBRARY 29 AUG 2011

# காட்டுத் தீ

## நல்லதா கெட்டதா?



அண்மைய காலங்களில் உலகம் தழுவிய முறையில் காடுகளில் அதி ஆக்ரோஷமான முறையில் காட்டுத்தீ ஏற்படுவது என்பது நடைமுறையாக உள்ளது. அப்படியெனில், முன்னைய காலங்களில் இது போன்ற காட்டுத்தீக்கள் இல்லையா என்று கேட்டால் கண்டிப்பாக இருந்திருக்கும்.

ஆனால், முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் ஏன் இப்பொழுது மட்டும் ஒவ்வொரு முறையும் காட்டுத்தீ மிகப்பெரிய அளவில் பரந்துபட்ட வெளிகளைச் சாம்பலாக்கிச் செல்வதும் பலத்த பொருளாதார இழப்புகளையும் சில சமயங்களில் மனித உயிர்களைக் காவு கொண்டு அழிவை ஏற்படுத்துகிறது?

இதற்குரிய காரணங்களில் முதன்மையானதாக நிற்பது உலகச் சூடேற்றம். அதனையடுத்து நீண்டுபோன வறண்ட கோடைக்காலம். இவைகளின்றி வட அமெரிக்காவில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான காட்டுத் தீ கட்டுப்பாட்டு சட்ட திட்டத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களும் தீயை அணைக்கப் பயன்படுத்தப்பட்ட கருவிகளும் காரணமாகின்றன. இவை அந்த நேரத்தில் பெருமளவில் காட்டுத்தீயை நன்றாகவே கட்டுக்குள் வைக்க உதவின. ஆனால், இன்று அவையே கட்டுங்கடங்காத காட்டுத்தீக்களை உருவாக்குவதற்கு உதவுவதாகவும் அமைகின்றன.

இன்று பெருகிவரும் மக்கள் தொகையும் அவர்களுக்கான தேவையும் பல்கிப் பெருகிப் போக, வனப் பகுதிகளுக்குள்ளும் மனித வாழ்விடங்கள் பன்முகமாக காலூன்றியதும் ஒரு வகையில் காட்டுத்தீ ஏற்படும் பொழுது மோசமான விளைவுகளை ஏற்படுத்திச் செல்வதாக உள்ளது.

பொதுவாக காட்டுத்தீ, காடுகளில் ஏற்படுவது இயற்கையின் சூழலில் தவிர்க்க முடியாத ஒன்று. அதுபோன்ற தீக்கள் இயற்கையில் மின்னலின் மூலமாகவும் பாறைகள் எப்பொழுதாவது உருள்வதால் ஏற்படும் உரசலால் உருவாக்கப்படும் தீப்பொறிகள் மூலம் ஏற்படுவதுண்டு.

அவ்வாறு காட்டுத்தீக்கள் ஏற்படுவதினால் பல நன்மைகளும் சில தீமைகளும் இயல்பாகவே பக்க விளைவுகளாக விட்டுச் செல்லப்படுகின்றன. சில மரங்கள் இத்தீக்களைத் தாண்டியும் நிற்கும் திறனுடையதாக தகவமைவுகளை இயல்பாகவே பெற்றிருக்கின்றன.

சில நேரங்களில் இத் தாவரங்களின் இனப் பரவலுக்கும் இத் தீக்கள் உதவலாம். தீக்கு மூன்பு வரை அங்கு வாழும் தாவரங்களால் சிலவற்றுக்கு வெளிச்சமே கிடைக்காமல். வெளிக்கிளம்ப முடியாதவைகளாக இருந்திருக்கக்கூடும். இப்பொழுது கிடைத்த இடைவெளியைப் பயன்படுத்தி பன்முக வழியில் தாவரங்கள் மீண்டும் செழித்து வளர ஒரு வாய்ப்பை வழங்குவதாகவும் தேவையில்லாத அடர்ந்த ஊடு தாவரங்களை விலக்கி அதனை ஒரு கட்டுக்குள் வைத்திருக்கவும் காட்டுத்தீ ஒரு காரணியாக அமையலாம்.

அதற்கு நேர்மாறாக தீமைகள் என்று பார்த்தோமானால், அதீதமான கட்டுக்கடங்காத தீ பெரும் பரப்பினையும் அதனூடாக வாழும் சிறு ஜீவராசிகளையும் அழித்துவிடுகிறது. மேலும் அடிக்கடி இது போன்ற தீ ஏற்படுமாயின் சிறு தாவரங்களின் வளர்ச்சி நிலை குறுக்கப்படுகிறது. நம் பங்கிற்கு மனிதருடைய இழப்பாக வீடுகள் அதனையொட்டிய வியாபாரத் தளங்கள், மர வியாபார நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன.

இன்றைய கால கட்டத்தில் மனிதனின் பங்கு இந்தக் காட்டுத் தீ உருவாக்கத்தில் அதிகமாக இருக்கிறது என்றால் மிகையாகாது. அதி நவீன தீயணைப்பு வசதியும் (மேற்கத்தியநாடுகளில்) அடர்த்தியான ஊடு தாவரங்களுடன் இருக்கும் வனங்களே அழகான உற்பத்தித் திறன் மிக்க வனங்களாக அமையும் என்ற அணுகுமுறை ஆரம்பகால கட்டத்தில் நிலவியது நினைத்தபடியே அமைந்தாலும் சில பத்தாண்டுகளுக்குப் பிறகு பெரும் கட்டுக்கடங்காத காட்டுத்தீக்களை அந்த அணுகுமுறை தருவிப்பதாக அமைந்தது.

எப்படியெனில், இயற்கையின் அமைவில் ஒவ்வொரு பத்து வருடத்திற்கும் ஒருமுறை இயற்கையாக ஏற்படும் காட்டுத்தீக்களால் தேவையற்ற ஊடு தாவரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. இதனால் அவை எட்டி வளர்ந்து பெரும் மரங்களின் நுனிக் கிளைகளைத் தொட-முடியாத நிலைமை இருந்ததால் பெரும் மரங்கள் இத்தீக்களுக்கு இரையாகாமல் தப்பும் வாய்ப்புகள் இருந்திருக்கின்றன.

ஆனால், பின்னர் கொண்டுவரப்பட்ட புதுவுதமான அணுகுமுறை மூலம் நன்றாக தீயை எளிதில் கவர்ந்து கொள்ளும் வகையில் அடர்த்தியான ஊடு தாவரங்களும் குறிப்பிட்ட மர வகைகளை வெட்டி அதன் தண்டுப் பகுதியை எடுத்துக்கொண்டு மிச்சம் உள்ள பகுதிகளை அங்கேயே விட்டுவிட்டுச் செல்வதும் பெருமளவில் தீயின் உக்கிரத்தை அதீதப்படுத்துகிறது.

இன்னொரு காரணம் நம்முடைய கவனக்குறைவால் ஏற்படும் தீ. வனப்பகுதியில் பயணிக்கும் பொழுது எனக்கென்ன் என்று தூக்கியெறியும் சிகரெட் துண்டங்கள், சுற்றுலாவுக்கோ வேறு தேவைக்கெனவோ அமைக்கப்படும் முகாம்களில் ஏற்படுத்தப்படும் தீயிலிருந்து ஏற்படும் காட்டுத்தீ, அதற்கெல்லாம் மேலாக வேண்டுமென்றே வைக்கப்படும் தீ வனத்தினூடாகச் செல்லும் தனிவான மின்சாரக் கம்பிகளிலிருந்து உருவாக்கப்படும் தீ என்று பல விதங்களில் எமது கவனக்குறைவால் காட்டுத்தீக்கள் ஏற்படுகின்றன.

இந்நிலையில் காட்டுத்தீயைக் கட்டுக்குள் வைப்பதனைக் கருத்திற்கொண்டு 'குறிப்பிட்ட மர அகற்றல் *(Selective tree felling)* என்ற புதுவிதமான நுட்பத்தை அணுகுகிறார்கள். இதன் மூலமாக பெரும் மரங்களுக்கு பரவும் தன்மையைத் தடுக்க முடியும் என்ற நம்பிக்கையுண்டு.

இந்தியா, இலங்கை போன்ற வெப்பமான நாடுகளில் அமையும் மழைக்காடுகளில் ஏற்படும் தீ, இயற்கையாக ஏற்படுவனவாகவே இருந்தாலும் அதனால் ஏற்படும் நன்மைகளைக் காட்டிலும் தீமைகளே அதிகமாக உள்ளன. சில நன்மைகள் மேற்கூறிய முறைகளில் கிடைத்தாலும் ஒவ்வொரு முறை இதுபோன்ற தீக்கள் ஏற்படும் பொழுதும் வெளிவிடப்படும் அதிகூடிய வெப்பம் (சில சமயம் 1000 இலிருந்து 2000 பாகை பாரன்ஹீட்) தாவர வகைகளின் விதைகளைக் கூட அழித்துவிடுகிறது. தீக்குப்பிறகு அங்கு வாழும் பன்முகப் பறவை மற்றும் சிறு விலங்குகளின் இன வகைகளில் மாற்றங்கள் பெரிதாக நடைபெறாவிட்டாலும் உணவாகக் கிடைக்கும் தாவர, விலங்கு வகைகளைக் கொண்டு அதன் கூட்டமைவில் சில மாற்றங்கள் அமையக் கூடும்.

குளிர்ச்சியான தட்ப வெப்பம் கொண்ட நாடுகளில் உள்ள காடுகளைப் போலன்றி வெப்ப மழைக்காடுகள் அதிக ஜீவராசிகளை மர உச்சியிலிருந்து அழுகி வரும் இலை தழைகளுக்கிடையேயுமாக எங்கும் எப்பொழுதும் கொண்டிருக்கின்றன. அதனைப் போன்றே தாவர இனங்களும் செழித்து இருப்பதால் மழைக்காடுகளில் இது போன்ற தீயும் பெரும் சேதத்தினை உருவாக்கி விடுகிறது. அதுவும் இயற்கையாகவே நிகழும் நிலையிலே கூட இத் தருணத்தில் மனிதனின் தவறுகளால் நிகழும் காட்டுத்தீக்களும் சேர்ந்துகொண்டால் நம் கற்பனைக்கும் எட்டாத விளைவுகளை எதிர் கொள்ள வேண்டி ஏற்படும்.

இச் சூழலில் நாம் பொறுப்புணர்ந்து நம்மால் காட்டுத்தீக்கள் உருவாக்கப்படாமல் தவிர்ப்பது மிகவும் அத்தியாவசியமாகிறது.

280811-1.indd 4

# உயிர் குடிக்கும் பிளாஸ்டிக் போத்தல்கள்



அனைத்துப் பொருட்களும் பிளாஸ்டிக் மயமாகி விட்ட இன்றைய சூழ்நிலையில் அண்மைக்காலமாக பிளாஸ்டிக்குக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்துள்ளன. இருந்தும் இப்பாவனையாளர்களின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை.

சூழலியலாளர்கள் பிளாஸ்டிக் பொருட்களைத் தொடர்ந்து பாவிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றனர்.இருந்தாலும் வீடுகள்,அலுவலகங்கள்,தொழிற்சாலைகள் என அனைத்து இடங்களிலும் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிக்கப்படுகிறது.பிளாஸ்டிக் பாவனையில் ஏற்படுகின்ற பாதிப்புகளை உணருகின்ற போதிலும் பாவனையாளர்களின் எண்ணிக்கை குறையவில்லை.

உபயோகிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை திரும்பவும் பாவிப்பதன் மூலம் உடலுக்கு தீங்கு ஏற்படுகின்றது என வைத்தியர்கள் கூறுகின்ற போதிலும் இதனைத் தொடர்ந்து பாவிப்பவர்கள் பாவித்துக் கொண்டே இருக்கின்றனர்.

பிளாஸ்டிகிலான குடிநீர் போத்தல்களை ஒருமுறை பாவித்த பின்னர் வீசிவிட வேண்டும்.அதனை மீள்பாவனைக்கு பயன்படுத்துவதால் பல்வகையான நோய்கள் ஏற்படலாம் என்று பொரளையிலுள்ள அரச வைத்திய ஆராய்ச்சி மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அரச வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் வைத்தியர் சமரநாயக்க கூறுகையில்; இந்த ஒரு தடவை உபயோகிக்கப்பட்ட போத்தல்களில் உணவுக்காக பயன்படுத்தும் எதனையும் உள்ளடக்க வேண்டாம். பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்களை பயன்படுத்திய பின்னர் அதனை மீள்பாவனை செய்ய முடியாத விதத்திலேயே அப்போத்தல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மீள்பாவனைக்கு இப்போத்தல்களை பயன்படுத்துவதால் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணிகள் உடலில் உள்ளாகலாம். பெரும்பாலானோர் பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்கள் பயன்படுத்திய பின்னர் மீண்டும் குடிநீரை நிரப்பி வைத்து பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் ‘டயொக்சின்’ என்ற நச்சுத் தன்மையுடைய இரசாயன திரவம் உடலுக்குள் உள்ளீர்க்கப்படும் ஆபத்துள்ளது. அத்தோடு தேங்காய் எண்ணெய் உட்பட குளிர் பானங்கள் வேறு உணவுப் பொருட்கள் இவ்வாறான போத்தல்களில் அடைக்கப்பட்டு பாவனைக்கு எடுப்பது ஆபத்தானது. இதனால் பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதேவேளை, இவ்வாறான போத்தல்களை தொடர்ந்து பயன்படுத்துவதால் கருச்சிதைவு, புற்றுநோய் உருவாக வாய்ப்புகளுள்ளது. எனவே குடிநீரை கண்ணாடிப் போத்தல்களில் அடைத்து வைத்து பாவிப்பது சிறந்ததாகும் எனவும் வைத்தியர் மேலும் தெரிவித்தார்.

தத்தமது எதிர்காலத்தை கருத்தில் கொள்ளாமல் தொழில்நுட்ப வளர்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புகள் அவற்றினாலான வருமானம் என புதிய பல இலக்குகளைத் தேடி மனிதன் செல்கின்றான். ஓசோன் படை அரிப்பு, சூழல் மாசடைதல், காலநிலை மாற்றம் எனப்புதிய பல பிரச்சினைகள் அவனைச் சுற்றி வருகின்றன.

பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் தொழில்களுக்குச் செல்வோர் தமது தண்ணீர் பாவனைக்காக ஒரு தடவை உபயோகிக்கப்பட்ட பிளாஸ்டிக் போத்தல்களை மீண்டும் மீண்டும் உபயோகிக்கின்றனர். தத்தமது நீர் தேவையை நிறைவேற்றிக் கொள்ள இது இலகுவான வழிமுறை என்பதால் அவ்வாறே போத்தல்களை உபயோகிக்கின்றனரே தவிர, இதனால் எமது உடலுக்கு ஏற்படுகின்ற தீங்குகள் பற்றி சிறுதுளியளவேனும் கவனத்தில் கொள்வதில்லை.

ஒரு பொருளின் பாவனை முடிந்தபின் அப்பொருளை அதே வடிவில் மீள் உபயோகிக்க முடியாத ஒரு நிலையில் அதனை பயனுள்ள இன்னொரு பொருளாக்கி பயன்படுத்துதல் இல்லாவிடின் வேறு தேவைகளுக்காக உபயோகித்தல் மூலமே இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுவதை தடுக்க முடியும்.

இவ்வாறு அனைத்துப் பிரிவினரும் உபயோகிக்கும் பிளாஸ்டிக்குக்கு இணையான மாற்று பொருட்கள் தகுந்த அளவில் கண்டுபிடிக்கப்படாததால் எதிர்வரும் காலங்களில் பிளாஸ்டிக் பயன்பாடு பன்மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக சீனாவில் நடந்த பன்னாட்டு பிளாஸ்டிக் கருத்தரங்கொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஒருவர் ஆண்டொன்றுக்கு சராசரியாக 25 கிலோ பிளாஸ்ரிக்கை பயன்படுத்துவதாகவும் அக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டிலும் கடந்த காலங்களிலும் கூட பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்திற்கெதிராக பாரிய பாதுகாப்பு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் நாம் உறுதியான வெற்றியை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லையென்றே கூற முடியும். சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சினால் பொதுமக்களின் நலன் கருதி பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அவை இன்று வரை பூர்த்தியாகவில்லை.

எனவே, சுகாதார அமைச்சின் அறிவுரைகளைப் பின்பற்றி எமது சுகாதாரத்தை பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொருவரும் முன்வருகின்ற போதே கடந்த காலங்களில் அறிவற்ற நிலையில் செயற்படுத்திய செயற்பாடுகளை மாற்றியமைக்க முடியும்.

எச்.ஹுஸ்னா



# நடிப்பதும் சிறந்த உடற்பயிற்சி

ஒரு நாளைக்கு பதினைந்து நிமிடம் நடந்தால் போதும் மாரடைப்பு புற்றுநோய் போன்ற ஆபத்து நம்மை நெருங்காது என்று புதிய ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

வாரத்துக்கு நூற்று ஐம்பது நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்வது வாழ்க்கைக்கு அவசியம் என உலக நல நிறுவனம் நிர்ணயித்துள்ளது.அதை விட குறைவாக ஓடியாடினால் போதும் என்ற தகவல் தாய்வான் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது.பன்னிரண்டு ஆண்டுகளில் நான்கு இலட்சம் பேரை ஆய்வு செய்திருக்கிறார்கள்.

இந்த ரீதியில் போனால் உடற்பயிற்சியே அவசியமில்லை என்ற செய்தி வரலாம் என்று சிலர் எதிர்பார்க்கக்கூடும்.நடப்பது, ஓடுவது, படி ஏறுவது,சைக்கிள் ஓட்டுவது,நீச்சல் அடிப்பது போன்ற எந்த விதமான உடற்பயிற்சியும் இல்லாதிருப்பது நோய்களுக்கு விடுக்கும் அழைப்பு என்பதில் டாக்டர்களிடையே மாறுபட்ட கருத்து இல்லை.தினசரி அல்லது வாரத்துக்கு எத்தனை நிமிடம் என்ன விதமான பயிற்சி அவசியம் என்பதில் தொடர்ந்து மாறுபட்ட கருத்துகள் வெளியாகின்றன.


வாரத்தில் ஐந்து நாட்கள் முப்பது நிமிடங்கள் மிதமான பயிற்சியும் மூன்று நாட்கள் இருபது நிமிட கடும் பயிற்சியும் தேவை என்பது பெரும்பாலான ஆராய்ச்சிகளின் அடிப்படையில் சிபாரிசு செய்யப்படுகிறது.நடப்பதற்கே தயங்கும் சோம்பேறிகளை ஓடச் சொன்னால் பலிக்குமா? அத்தகையவர்களுக்கு ஆறுதல் தருகிறது தாய்வான் ஆய்வு லான்செட் போன்ற பிரபலமான மருத்துவ இதழ்களில் வராத கண்டுபிடிப்புகளும் இருக்கின்றன.

கீழே விழுந்த பென்சிலை குனிந்து எடுப்பது பேட்டரி தீர்ந்த ரிமோட்டை கடாசிவிட்டு ரிவியில் சேனல்களை கையால் மாற்றுவது லிப்ட் இருந்தாலும் இறங்கிவர படிகளை பயன்படுத்துவது. சனிக்கிழமை நவக்கிரகம் சுற்றுவது இந்த மாதிரியான அலட்டல் இல்லாத அசைவுகளும் ஆரோக்கியத்துக்கு பெரிதும் உதவுகின்றன.சாராம்சம் என்னவென்றால் உடல் அசைந்து கொண்டே இருக்கவேண்டும்.

தொடர்ச்சியாக ரிவி பார்ப்பதும் கம்பியூட்டரில் வேலை செய்வதும் உடல் அசைவுக்கு உதவாது என்பதால் தவிர்க்க வேண்டியவை.எப்போதும் சுறுசுறுப்பாக இயங்குவதுபோல் கை கால்களை ஆட்டி நடிப்பதுகூட நல்லது நாள்போக்கில் நிஜமாகவே சுறுசுறுப்பாகி விடுவோம்.கொடிய நோய்கள் நம்மை நெருங்காமல் புதிய சோம்பேறிகளை தேடிப் போகும்.



## மருத்துவம்



# மண்ணீரலின் மகத்துவம்

நம் உடம்பினுள் இருக்கும் ஒவ்வொரு உறுப்பும் அதன் அதன் பணியைச் சிறப்பாகச் செய்தால் தான் நம்மால் நோயின்றி வாழ முடியும். அப்படிச் சிறப்பாகச் செயல்பட வேண்டிய உள் உறுப்புகளில் முக்கியமானதொன்று மண்ணீரல்.

இது கல்லீரலுக்கு அருகில் உள்ள உறுப்பாகும். நிணநீர் உறுப்புகளில் மிகப்பெரிய உறுப்பு மண்ணீரல்தான்.இது ரெட்டிக்குலார் செல்கள் மற்றும் அவற்றின் நார்கள் போன்ற பகுதிகளால் ஆன வலைப்பின்னல் அமைப்புக் கொண்டது.

முதிர்ந்த இரத்த சிவப்பணுக்களை அழிப்பதே மண்ணீரலின் முக்கிய பணியாகும். மேலும், இரத்த சிவப்பணுக்களின் செயல்களைச் சீர்ப்படுத்துவதும் இதயத்தின் செயற்பாடுகளைத் தூண்டுவதும் சீராக்குவதும் இதன் வேலைதான்.

மண்ணீரல் பாதிக்கப்பட்டால் இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படும். நுரையீரலின் செயற்பாடுகளிலும் மண்ணீரலுக்குப் பங்கு உண்டு.

இரத்தத்தில் உள்ள தேவையற்ற நுண்கிருமிகளை அழித்து சிறுநீரகத்தின் செயற்பாடுகளை மண்ணீரல் தூண்டுகிறது.அதேபோல் இரத்த ஓட்டப் பாதையில் கிருமிகள் போன்ற வெளிப்பொருட்களை வடிகட்டி வெளியேற்றவும் செய்கிறது. உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தியை மண்ணீரல் அதிகரிக்கிறது. வியர்வைச் சுரப்பிகளையும் தூண்டிச் செயற்பட வைக்கிறது.

மண்ணீரலில் பாதிப்பு ஏற்படுவதை சில அறிகுறிகளைக் கொண்டு அறியலாம். அவை:

உடம்பின் எடை அதிகரிப்பது, அடிவயிற்றில் கடுமையான வலி ஏற்படுவது, நாக்கு வறண்டு விறைப்புத்தன்மையை அடைவது,வாயுக்களால் உடம்பெங்கும் வலி உண்டாவது, வாந்தி, உடல் பலவீனமடைவது, உடல் பாரமாகத் தெரிவது,கால் பகுதிகளில் வீக்கம், வலி, சாப்பிட்டவுடன் தூக்கம், எப்போதும் சோர்வு, மஞ்சள் காமாலை ஏற்படுவது, இரத்த அழுத்தம் அதிகரிப்பது,சிறுநீர் சரியாகப் பிரியாமல் இருப்பது போன்றவைகள் எல்லாம் மண்ணீரல் பாதிக்கப்பட்டிருப்பதன் அறிகுறியாகும்.

மண்ணீரல் பாதிக்கப்படுவதற்கான காரணங்கள் என்னென்ன தெரியுமா?

* அடிக்கடி கோபம், எரிச்சல், மனஅழுத்தம் அடைவோருக்கு மண்ணீரல் பாதிப்படையலாம்.
* மதுப்பழக்கம், புகைப்பழக்கம் போன்றவற்றாலும் மண்ணீரல் பாதிக்கப்படக்கூடும்.
* கல்லீரல்,பித்தப்பை,இரைப்பை,சிறுகுடல் பகுதியில் ஏதாவது ஒன்று பாதிக்கப்பட்டாலும் மண்ணீரல் பாதிப்புக்குள்ளாகும்.
* இரத்தத்தில் பித்தநீர் அதிகரிப்புக் காரணமாகவும் மண்ணீரல் பாதிப்படையலாம்.
* கல்லீரல் வீக்கம், குடல்புண்,வயிற்றுப்புண் ஆகியவையும் மண்ணீரலைப் பாதிக்கும்.
* கீரைகள்,கரட்,பீற்றூட்,வெள்ளரிக்காய், முள்ளங்கி,புதினா,பூண்டு, தேங்காய், முகைட்டிய பயறு,சின்ன வெங்காயம் போன்றவை மண்ணீரலுக்கு நலம் பயக்கும். பழவகைகளில் கொய்யா,திராட்சை, ஒரேஞ்சு, அன்னாசி, பப்பாசி, மாதுளை, அத்திப்பழம், ஸ்ட்ராபெர்ரி, பிளம்ஸ் போன்றவை மண்ணீரலுக்கு உகந்தது.





# பிரியங்காவின் 'புலி'ப் பாசம்

இந்தியாவின் தேசிய விலங்கான புலிக்கு இது சோதனைக் காலம். அழிந்துவரும் காடுகள், கூடிவரும் மனிதக் குறுக்கீடுகள், வேட்டைக்காரர்களின் வெறி எல்லாம் புலிகளை நிம்மதியிழக்கச் செய்திருக்கின்றன. சுவச்ச சுபாவமுள்ள இந்தப் பிராணியின் எதிர்காலம் நிச்சயமற்று இருக்கிறது.

ஆனால்,'ரந்தாம்பூர்: புலிகளின் இராஜ்ஜியம்' என்ற புதிய புத்தகம் புலிகளுக்கு ஆறுதல் அளிக்கக் கூடும்.வேறு இருவருடன் இணைந்து இந்தப் புத்தகத்தைப் படைத்திருப்பவர், பிரியங்கா காந்தி வதேரா. இவர் நூலாசிரியர் அவதாரம் எடுக்கும் முதல் நூல் இது.

ராஜஸ்தானின் ரந்தாம்பூர் வனப் பகுதியில் புலிகளின் ஆட்சியை அப்படியே படங்களாலும் கட்டுரைகளாலும் காட்சிப்படுத்தியிருக்கிறார் பிரியங்கா. இவருடன் இணைந்து இந்நூலை எழுதியிருப்பவர்கள், அஞ்சலி–ஜெய்சால் சிங் தம்பதி.

ரந்தாம்பூர் வனப் பகுதிக்கு சிறுமியாக இருந்த போது தனது தந்தை ராஜீவ் காந்தியுடன் வந்திருக்கிறார் பிரியங்கா. அப்போதே புலிகள் இவர் மனதைக் கொள்ளை கொண்டு விட்டன. அதை புதிய புத்தகத்தில் வெளிகாட்டியிருக்கிறார் பிரியங்கா.

இந்நூலை இணைந்து உருவாக்கியிருக்கும் ஜெய்சால் சிங், பத்திரிகையாளர்களான தனது பெற்றோர் மாளவிகா–தேஜ்பீர் சிங்குடன் தன்னுடைய இளம்வயதில் ரந்தாம்பூருக்குச் சென்றிருக்கிறார். 1974 இல் தான் முதல் முறையாக ரந்தாம்பூருக்குச் சென்றபோதே அங்குள்ள வனக் காவலர் பதேசிங் ரத்தோருடன் நன்கு பழகிவிட்டார்.

ஜெய்சால், இன்றும் வனங்களுக்குப் புலிகளைக் காண விரும்பிச் செல்கிறார். ஓவியரான இவரது மனைவி அஞ்சலி திருமணத்துக்கு முன்னால், 'நீங்கள் எந்நேரமும் காட்டுலதான் வசிப்பீங்களா?' என்று அப்பாவியாகக் கேட்டிருக்கிறார். இன்றோ அஞ்சலியும் வன வாழ்க்கையை நேசிக்கத் தொடங்கிவிட்டார்.

புலிகளைப் பற்றிய அறிவையும் அவற்றைக் கண்டுபிடிக்கும் திறனையும் ஜெய்சால் வளர்த்துக் கொண்டிருக்கிறார். அதில் புலிகளைப் பற்றி ஆர்வம் காட்டிய ஜெய்சாலின் தந்தை தேஜ்பீருக்கும்,மாமா வால்மிக் தாப்பர், வனக் காப்பாளர் ரத்தோர் ஆகியோருக்கும் பங்கிருக்கிறது.

இது ஜெய்சாலின் கதை என்றால், புலிகள் மீதான பிரியங்கா குடும்பத்தின் பாசத்துக்கும் நீண்ட வரலாறு இருக்கிறது. 'வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தை' [1972] கொண்டு வந்தவர், பிரியங்காவின் பாட்டியான இந்திரா காந்தி. அதன் அடிப்படையில் முதன் முதலில் புலிகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்ட காடுகளில் ஒன்று ரந்தாம்பூர்.

வழு வழு தாளில் அழகான அரிய படங்கள் இடம்பெற்றிருக்கும் பிரியங்காவின் நூல் முழு வடிவம் பெறுவதற்கு ஆறு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. புலிகளைப் பற்றி இதன் ஆசிரியர்கள் நன்கு அறிவார்கள் என்பது, நூல் பக்கங்களைப் புரட்டும்போது புரிகிறது. தெற்காசியப் புலியின் கம்பீரத்தை தரிசிக்க முடிகிறது.

ஜெய்சால், பிரியங்காவுக்கு இடையில் உள்ள நாட்டைப் போல் இவர்களின் பாட்டிகளான ராஜ் தாப்பர், இந்திரா காந்திக்கு இடையிலும் ஆழமான நட்பு நிலவியிருப்பது ஆச்சரியமான விடயம்.

பிரியங்காவின் எழுத்துகளை அவரது குடும்பத்தின் பழங்கால புகைப்படத் தொகுப்பு அலங்கரிக்கிறது. அஞ்சலியின் ஓவியங்களும் நூலில் இடம்பெற்றுள்ளன. பிரியங்காவும்,ஜெய்சால் தம்பதியும் தங்களின் இது நாள் வரையிலான புலி ஆராய்ச்சி அனைத்தையும் இந்நூலில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்கிறார்கள் விமர்சகர்கள்.

மிக உயர்ந்த தரத்திற்கொண்டு வரப்பட்டுள்ள 'ரந்தாம்பூர்: திடைகர்ஸ் ரெல்ம்' நூல் 2 ஆயிரம் பிரதிகள் மட்டுமே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. 164 பக்கங்கள் கொண்ட இப்புத்தகம், புலி நேசகர்களுக்கு நிச்சயம் ஒரு பொக்கிஷம். விலைதான் அதிகம் 10,000 ரூபா.

## 'மம்மி'கள் பயன்படுத்திய ஜெல்



இங்கிலாந்து நாட்டிலுள்ள மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் துறை நிபுணரான நடாலி மேக்கிரீஷ் என்பவர் தலைமையில் எகிப்து நாட்டின் மம்மிகள் பற்றி ஆய்வு மேற்கொண்டனர்.அவர்களின் ஆய்விற்கு எடுத்து கொள்ளப்பட்ட 18 மம்மிகளில் பெரும்பாலானவை கிரேக்க-ரோமன் காலத்தின்படி 2,300 வருடங்களுக்கு முற்பட்டவை.அதில் மிக பழைமையான மம்மியின் வயது 3,500 ஆகும்.இந்த மம்மிகளில் ஆண்,பெண் என்ற 4 வயது முதல் 58 வயது வரையிலானவர்கள் அடங்குவர்.மைக்ரோஸ்கோபி முறையில் ஒளி மற்றும் எலக்ட்ரான்களைப் பயன்படுத்தி ஆராய்ந்ததில் 9 மம்மிகளின் தலை முடியில் கொழுப்பு போன்ற பொருள் பூசப்பட்டு இருந்தது.ஆய்வில் அது போல்மிடிக் மற்றும் ஸ்டியரிக் வகையைச் சேர்ந்த கொழுப்பு அமிலங்கள் என தெரிய வந்தது.

ஜெல் வடிவில் பயன்படுத்தப்பட்ட அவை எதிலிருந்து எடுக்கப்பட்டது என்பது சரிவர தெரியவில்லை.எனினும் தற்போது எகிப்து நாட்டவர்கள் பழங்காலத்திலேயே தங்கள் தலைமுடியினை அழகாக பராமரித்து வந்துள்ளனர் என்பதும் மம்மிகள் உருவாக்கத்திலும் அந்நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது என்பதும் ஆய்வின் வழியாகத் தெரிய வந்துள்ளது.

## இன்னொரு எயிட்ஸா?

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பது எதற்குப் பொருந்துகிறதோ இல்லையோ, பால் 'வினை' நோய்களுக்கு நிச்சயமாகப் பொருந்துகிறது!

ஏற்கனவே எயிட்ஸுக்கு மருந்தே இல்லாத நிலையில், எயிட்ஸ் வராமல் தடுக்க வேண்டும் என்று உலகம் தலைகீழாக நின்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் இன்னொரு செய்தி மருத்துவ உலகின் தலையில் இடிபோல் விழுந்திருக்கிறது.

ஜப்பானில் உள்ள சியாட்டோ நகரில் மேகவெட்டை நோயால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரின் உடலில் ஆன்ட்டிபயாடிக் மருந்துகளைச் செயலிழக்கச்செய்யும் எதிர்ப்பொருள் வளர்ச்சியடைந்துள்ளதை மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளதே அதிர்ச்சிக்குக் காரணம்.

இந்த மேகவெட்டை நோய் வந்தால் இடுப்புப் பகுதியில் அழற்சி, கருப்பையில் குழந்தை உருவாகாமல் இடம்மாறி உருவாகுதல், பிள்ளைப் பேறின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

மேகவெட்டை நோய்க்கு மருத்துவர்கள் இதுவரை ஆன்ட்டிபயாடிக் மருந்துகளைக் கொடுத்துக் குணப்படுத்தி வந்தார்கள். ஆனால், இப்போது அந்த மருந்துகளைக் கொடுத்தால் மேகவெட்டை நோய் குணமாகவில்லை. ஆன்ட்டிபயாடிக் மருந்துகளை எதிர்க்கும் சக்தியை நோய்க் கிருமிகள் வளர்த்துக் கொண்டுவிட்டன. இனி புதிய மருந்து கண்டுபிடிக்க வேண்டும்.

ஓர் எயிட்ஸையே ஒழிக்க முடியாதபோது இன்னொரு எயிட்ஸ் நோய் தேவையா? என்று தலையில் கைவைத்து உட்கார்ந்திருக்கிறார்கள் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்த கனடா நாட்டு ஆராய்ச்சியாளர்கள்.



# அக்கம் பக்கம்

## பிரபலமான பெண்களா? கவனம்!

கம்பீரமான உடல்வாகுடன் தோன்றும் அந்த நபருக்கு வயது ஐம்பதைத் தொடும். தும்பைப்பூ வேஷ்டி, பளிச்சென்ற சட்டையில் கட்சியளிக்கிறார். உற்றுப்பார்த்தால் அவரது பெரிய மீசையும், தாடியும் இயல்புக்கு மாறாக முகத்தில் இடம் பிடித்திருப்பது தெரிகிறது.

பிரபலமான பெண்கள் இருக்கும் வீடுகள் இவரது குறி. ஒரு பெண் பிரபலமாகி விட்டாலே, அவளது வளர்ச்சி கணவருக்கும் பிடிக்காமல் அவர்; அவளோடு பட்டும்படாமலும் தான் ஓட்டிக்கொண்டிருப்பார் என்பது இவர் உணர்ந்திருக்கும் சித்தாந்தம். பிரபலமான பெண்கள், அடுத்தொன்று பெற்றுக்கொண்டால் அழகில் குறைபாடு ஏற்பட்டுவிடும் என்று கருதுவதால், ஒரே குழந்தையோடு நிறுத்திக் கொள்வார்கள் என்பதும் இவரது நம்பிக்கை. இப்படி ஒரேயொரு குழந்தையை மட்டும் பெற்று வைத்திருக்கும் பிரபலங்களுக்கு பெரும்பாலும் அந்த ஒன்று பெண் குழந்தையாகத்தான் இருக்கும் என்பது இவர் கணக்கு. தனது அத்தனை சொத்துக்களுக்கும் வாரிசு என்பதாலும், தனது ஒரே குழந்தைக்கு ஆபத்து ஏதும் வந்துவிடக்கூடாது என்பதாலும் அவர்கள் பெரும்பாலும் அந்த பெண் குழந்தையை பாதுகாப்பான 'சர்வதேச உறை விடப் பள்ளி' ஏதாவது ஒன்றில் சேர்த்துவிடுகிறர்கள் என்பதையும் இவர் தெரிந்து வைத்திருக்கிறார்.

ஊடகங்களில் அந்த பிரபலபெண்கள் தனது மகள் பற்றி சொல்லும் போதோ, அல்லது வேறு ஏதாவது வழிகளிலோ அந்த 'ஒற்றைக்கொரு' குழந்தையை பற்றி இவர் தெரிந்து கொண்டு, தனது 'செயலை' ஆரம்பிக்கிறார்.

ஆட்கள் யாரும் இல்லாத நேரம் பார்த்து எப்படியாவது, உதவியாளரிடம் அனுமதி வாங்கி அந்த பெண் பிரபலத்தை சந்திக்கிறார். 'நீங்கள் இந்த துறையில் நிறைய சாதனைகள் செய்துவருவது எனக்கு ரொம்ப மகிழ்ச்சி தருகிறது. உங்களுக்கு நிறைய எதிரிகள் இருக்கிறார்கள். [இந்த உலகத்தில் எதிரிகள் இல்லாதவர்கள் யாரும் கிடையாதே...] எந்த எதிரியாலும் உங்களை அசைக்க முடியாது...' என்று ஜால்ரா அடித்து விட்டு, தன்னை யார் என்று விளக்குகிறார்.

'மாந்திரீகம் தெரியும். மற்றவர்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுவதை முன்னாலே தன்னால் அறிந்து கொள்ள முடியும்' என்றெல்லாம் கூறிவிட்டு, தன்னால் பலன் பெற்ற பிரபலங்கள் என்று சிலர் பெயரை கூறுகிறார். அவர்களுக்கு எந்த மாதிரி பிரச்சினைகள் வந்தன? அதை எப்படி உணர்த்தி, அவர்களை தப்பிக்கவைத்தேன் என்று தனது 'பராக்கிரம' கதைகளை அவிழ்ந்துவிடுகிறார்.

இத்தனையையும் அவர் சொல்லி முடிக்கும் போது அந்த பிரபல பெண்மணி, அதெல்லாம் இருக்கட்டும். எதற்காக சந்திக்க வந்தீர்கள். அதைச் சொல்லுங்கள்? என்பார் தானே! அவர் எப்போது அப்படி கேட்பார் என்ற எதிர்பார்த்து பேசிக்கொண்டிருக்கும் அந்த நபர் உடனே, 'உங்கள் ஒரே மகளுக்கு ஒரு கண்டம் இருக்கிறது...' என்பார். எப்போது அந்த பெண்மணியின் முகத்தில் எந்த அளவுக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது என்று கணிக்கிறார்.

தான் மாந்திரீக சக்தி மூலம் அதை தெரிந்து கொண்டதாகக் கூறி, 21 நாட்களுக்குள் அந்த கண்டம் வரும் என்றும் அதனால் எந்த அளவிற்கு விபரீதங்கள் உருவாகும் என்றும் கூறி, கலங்கடிக்கிறார். பின்பு, 'அதற்கு என்ன பரிகாரம்? என்று பிரபல பெண்மணி கேட்கும் போது,அவர் எந்த அளவிற்கு அதிர்ந்து போயிருக்கிறார் என்பதற்கு தக்கபடி பண பேரம் பேசுகிறார். பத்தாயிரம் ரூபாயில் இருந்து ஐம்பதாயிரம் வரை அவர் கேட்கிறார், பெரும் பாலானவர்கள் பயந்துபோய் பணத்தை கொடுத்துவிடுகிறார்கள்.

''என் குழந்தைக்கு அப்படி எதுவும் ஆகாது'' என்று யாராவது தைரியமாக சொன்னால் உடனே தனது செல் போன் நம்பரை கொடுத்துவிட்டு, 'இன்றிலிருந்து எட்டு நாட்களுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக பாதிப்பு ஆரம்பிக்கும், பொறுத்திருந்து பாருங்கள். அதன் பின்பு நீங்களே என்னை அழைப்பீர்கள்' என்று கூறிவிட்டு கிளம்பிப்போய்விடுகிறார். அன்றிலிருந்து அந்த பெண்மணி நிம்மதியில்லாமல் ஆகிவிடுகிறார். தன் மகளைப் பற்றிய பயம் அவரை வாட்டி வதைக்கிறது. அப்போது பார்த்து மகளுக்கு இருமல், தும்மல் வந்தால் அவ்வளவுதான், உடனே பதறியடித்து அந்த ஆசாமிக்கு போன் போட்டு அழைத்து பரிகாரத்திற்கு பணம் கொடுத்துவிடுகிறார்கள்.

இப்படி பிரபல பெண்கள், வசதியான பெண்களை குறிவைத்து ஒரு ஏமாற்று கோஷ்டி கிளம்பியிருக்கிறது. இவர்களுக்கு நீங்கள் ஒருமுறை பணிந்துவிட்டால் அவ்வளவுதான் உங்களுக்கு மூளை சலவைசெய்து உங்களோடு நிரந்தரமாக ஒட்டிவிடுவார்கள். உண்மையில் அதன் பிறகுதான் உங்களுக் 'ஒரிஜினல் கண்டம்' ஆரம்பிக்கும் கவனமாக இருந்துகொள்ளுங்கள்.

## 'ஷேவ்' செய்வது இலகுவானதா?



ஷேவிங் குறித்து நிறையவே தெரியும்.ஆனால் ஷேவிங் விடயத்தில் பலரும் பல முக்கிய அம்சங்களை மறந்து விடுகிறோம்.

ஷேவ் செய்வதில் என்ன பெரிசா இருக்கு.ரேசரை எடுத்தோமா ஷேவ் செய்தோமா என்று போக வேண்டியதுதானே என்று சிலர் கூறலாம்.ஆனால் அதிலும் கடைப்பிடிக்கவேண்டிய விடயங்கள் நிறைய இருக்குக் கேளுங்க.

காலையில் எழுந்ததுமே ஷேவ் செய்ய உட்கார்ந்து விடக்கூடாது.நீங்கள்தான் எழுந்திருக்கிறீர்கள்.உங்களது தோல் இன்னும் தூக்கத்திலிருந்து விழித்திருக்காது.இரவு முழுவதும் தூங்கியிருப்பதால் உங்களது கன்னம் சற்று உப்பியிருக்கும்.அதற்குக் காரணம் உங்களது தோலின் அடிப் பகுதியில் தேங்கியுள்ள திரவம்.அது குறையும் வரை காத்திருப்பது அவசியம்.அப்போதுதான் உங்களால் சிறப்பாக ஷேவ் செய்ய முடியும்.

ஷேவ் செய்வதற்கு முன்பு பேஷியல் கிளன்சர் அல்லது ஸ்க்ரப்பை வைத்து லேசாக கன்னத்தைத் தேய்த்துக் கொடுத்துக் கொள்வது நல்லது.அப்படி செய்வதால் எல்லா முடிகளையும் எழுப்பிவிடலாம்.இதன் மூலம் அனைத்து முடியையும் முழுமையாக ஷேவ் செய்ய முடியும்.

ஷேவிங் செய்வதற்கு முன்பு இதமான சூடு நீரால் நமது முகத்தை அல்லது எங்கு ஷேவ் செய்கிறோமோ அந்த இடத்தில் தடவி ஈரமாக்கிக் கொள்ளவேண்டும்.இதன் மூலம் முடியின் கடினத்தன்மை குறைந்து தோலை வெட்டிக் கொள்ளாமல் முடியை மட்டும் ஷேவ் செய்ய உதவியாக இருக்கும்.

ஷேவிங் கிரீமை முகத்தில் தடவும் போது அது நன்கு முடி முழுவதும் ஊடுருவும் படி பூச வேண்டும்.அப்போதுதான் ஷேவ் செய்யும் போது முடி முழுவதும் அகல வழி கிடைக்கும்.

எப்போதுமே கூரிய பிளேடையே பயன்படுத்துங்கள்.இதன் மூலம் விரைவில் ஷேவ் செய்யலாம். அத்தோடு தோல் முரட்டுத்தனம் அடைவதையும் குறைக்க முடியும்.மொட்டையான பிளேடைப் பயன்படுத்தினால் பலமுறை வறட் வறட் என்று இழுக்க நேரிடும்.அது தோலுக்குப் பாதிப்பைக் கொடுக்கும்.

எப்போதுமே முடியின் இயல்புக்கேற்பவே ஷேவ் செய்யவேண்டும்.எதிர்ப்புறமாக செய்தால் அது முடியின் வேர்ப் பகுதியைப் பாதிக்கலாம்.தோலில் புண்ணை ஏற்படுத்தி விடலாம்.முரட்டுத்தன மாகத் தோல் மாறவும் வாய்ப்பு ஏற்படுத்தலாம்.எனவே அதைத் தவிர்ப்பது நல்லது.

.ஷேவிங்தானே என்று நினைக்காமல் அதை ஒரு கலையாக நினைத்து அழகாகச் செய்தால் முக அழகை மேலும் வசீகரமாக்கலாம்.

# கூவல்

முனைவர் சுந்தர ஆவுடையப்பன்

இலக்கிய சுவை...

கூவல் என்பது ஒரு சிறு கிணறு அல்லது குட்டை. கலங்கல் நீரை உடையது. பெரும் பாலும் கடும் பாலை நிலங்களில் மட்டுமே இது இருப்பதாக சங்க இலக்கியம் பகர்கின்றது. தாகத்தால் நீர்பெறாது தவிக்கும் உயிரினங்க ளுக்கு இதுவே தாகம் தவிர்க்கும் பணியைச் செய்கிறது.

**"வெயில் வெய்துற்ற பரல் அவல் ஒதுக்கில்**
**கணிச்சியில் குழித்த கூவல் நண்ணி**
**ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்**
**யானை இன நிரை வெய்யும் கானம்" (நற்-240)**

எனும் நற்றிணைப் பாடல் வரிகள் கூவலின் தோற்றத்தையும் தன்மை யையும் நமக்குப் புலப்படுத்துகின் றன.

அது ஒரு காடு. அங்கே மாடு மேய்க்கும் ஆயர்கள் வெயிலால் தகிக்கின்ற பரற்கற்கள் நிறைந்திருக் கிற ஒதுக்குப்புறத்தில் கணிச்சி என் கிற குந்தாலியால் குழிதோண்டியி ருக்கின்றனர். அதில் சிறிது தண்ணீர் தேங்கியிருக்கிறது. அதுதான் கூவல். தாகத்தால் அலையும் யானைக்கூட் டம் அந்தக் கூவலில் தண்ணீர் பரு குகிறது. நற்றிணை காட்டும் இந்தக் காட்சி கூவலின் அருமையை நமக்கு உணர்த்துகிறது.

வறண்ட பகுதிகளில் வாழும் மக் கள் தங்களின் தண்ணீர்த் தேவைக ளுக்காகச் செம்மண் நிலத்தில் சிறு கிணறு தோண்டி அதில் கிடைக்கும் கலங்கல் தண்ணீரை வீட்டின் முற் றத்தில் உள்ள பழைய மண் பானை களில் ஊற்றிவைத்து கடுக்காய் முத லியன போட்டுத் தெளியவைத்துப் பயன்படுத்தினார்கள் என்கிற செய்தி யைப் புறநானூறு குறிப்பிடுகிறது.

**'பூவற் படுவில் கூவல் தோண்டிய**
**செங்கண் சில் நீர் பெய்த சீறில்**
**முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி**
**யாம்கஃடு உண்டென வறிது மாக இன்று' (புறநா.319)**

மண்ணைத் தோண்டிக் கூவல் உண்டாக்குவது தவிர, சில இடங்க ளில் பறைகளை உடைத்துக் குழி செய்து அதில் மழைநீர் தேக்கும் கூவல் வழக்கையை மற்றொரு புற நானூற்றுப் பாடல் காட்டுகிறது.

**கல் அறுத்து இயற்றிய வல் உவர்க் கூவல்**
**வில் ஏர் வாழ்க்கைச் சீறூர் (புறம்-331)**

மிகவும் துன்பப்பட்டு இந்தக் கூவல் உருவாக்கப்படுகிறது. வல் உவர்கூவல் என்றால் மிகுந்த சுவை யற்ற,தெளிவற்ற உவர்நீர் கொண்ட சிறுபள்ளம் என்று பொருள். இந்நீ ரைக் கொண்டுதான் அங்குள்ள மக் கள் வாழ்க்கை நடத்தினர். இவ்வாறு மிகவும் துன்பப்பட்டுத் தோண்டிய கூவலில் யானைகள் வந்து நீருக்குப் போராடிக் கலக்குவதால் உண்பதற்கு ஒவ்வாத நீராக அது மாறிவிடுவதா கப் புறநானூறு சுட்டுகிறது.

**'களிறுபொரக் கலங்கு கழல் முள்வேலி**
**அரிது உண் கூவல்' (புறம்-306)**

கொடிய பாலை வெளிகளில் நடந்து செல்பவர்கள் தங்களின் நடை வருத்தம் தீர அந்தச் சிறு குளங்களில்தான் நீர் பருகுவர். அவ்வளவு கொடிய காட்டுவழி அது என்கிறது நற்றிணை.

**'சுரன்முதல் வருந்திய வருத்தம் பைபயப்**
**பாஅர்? மலிசிறு கூவலின் தணியும்**
**நெடுஞ்சேண் சென்று வருந்துவர் மாதோ?' (நற்-41)**

'மலி சிறுகூவல்' என்பது மிகவும் மலிவான,கலங்கலான நீர்கொண்ட சிறு கிணறு அல் லது குளம் ஆகும். கொடிய பாலை வெளிகளில் பறக்கும் நாரை தனது தண்ணீர் வருத்தம் தீர இந்தக் கூவலில் நீருக்குத் துளா வியதாகப் பதிற்றுப்பத்து இலக்கியம் காட்டுகிறது.

**'கூவல் துழந்த தடந்தாள் நாரை' (ப.ப.51)**

கூவல் என்பது சிறு மலைப் பகுதிகளில் குகைபோல இருந்தது என்பதை 'கூவல் அன்ன விடரகம் புகுமின்' என்ற மலைபடுகடாம் (366) வரி மூலம் அறியலாம். கலங்கிய உவர்நீரைக் கொண்ட கூவல் மனிதர்களுக்கும் விலங்குகளுக் கும் தாகம் தீர்க்கும் பணியைச் செய்ததோடு துணிகள் துவைப் பதற்கும் பயன்பட்ட செய்தி யைப் புறநானூறு மூலம் அறிய முடிகிறது.

**'களர்ப்படு கூவல் தோண்டி நாளும்**
**புலைத்தி கழீஇய தூவெள் அறுவை' (புறம்-311)**

துணிவெளுக்கும் வண ணாத்தி களர் நிலத்தில் கிணறு தோண்டி தூய வெள்ளை ஆடைகளின் அழுக்கைத் துவைத்தாள். அந்தக் கிணறும் கூவல் எனப்பட்டது. தேங் கிய குட்டை,தோண்டிய சிறு பள்ளம், சிறுகுளம்,சிறு கிணறு என் றெல்லாம் கூறப்படும். இப்ப டிப்பட்ட கூவலும் தேனூற்றிய பாலைவிடச் சுவையானதாக இருக்கிறதாம் ஒரு ஐங்குறுநாற் றுத் தலைவிக்கு.


**'அன்னாய் வாழி வேண்டன்னை நம்படப்பைத்**
**தேன்மயங்கு பாலினும் இனிய -அவர் நாட்டு**
**உவலைக் கூவல் கீழ்**
**மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே' (ஐங்.203)**

அத்தலைவி நம் தோட்டத் துத் தேன் கலந்த பாலைவிட இனிமையானதாகஇருக்கிறது. என்னவர் நாட்டில் சருகுகளும் செத்தைகளும் கிடக்க மான் முதலிய விலங்கினங்கள் குடித் துக் கலக்கிய தண்ணீர் என்று கூறுகிறாள்.

காதலன் நாட்டின் கலங்கல் நீரும் இனிக்கிறது என்றால் சுவைப்பது நீரா? இல்லை அவ னுடைய அன்பா?

# பிரமிட்டுகள்

பிரமிட் என்பது கிரேக்க வார்த்தை. ஆதிகாலத்து கிரேக்கப் பயணிகள் எகிப்தில் ராஜாக்களின் விநோத சமாதிகளைப் பார்த்தபோது அதன் வடிவம் அவர்கள் சாப்பிடும் 'பிராமிஸ்' என்ற கேக் போல இருந்ததாம். அதனால் அதற்கு 'பிரமிட்' என்ற பெயர் வந்தது. எகிப்தில் நைல் நதியில் அவ்வப்போது வெள்ளம் வந்து அவரவர் நில எல்லைகளை அழித்துவிடும். அதனால், அவர்கள் திரும்பத் திரும்ப நிலத்தை அளந்து கோடு போட வேண்டியிருந்தது. இந்தப் பழக்கத்தால் ஆதி கால எகிப்தியர்கள் 'ஜியோமெட்ரி' (நில அளவு)யில் சிறந்து விளங்கினார்கள். இப்படித்தான் அவர்களுக்கு பிரமிட் கட்டும் திறமை ஏற்பட்டது.



கி.மு. 3000 இல், இம்ஹோதெப் என்பவர் ஜோஸர் என்ற ப்ராவோ மன்னனுக்கு கட்டியது தான் முதல் பிரமிட்.




## இரும்பு துருப்பிடிக்கக் காரணம்...



காற்று மண்டலத்தில் இருக்கும் போது இரும்பில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆனால், காற்றில் ஈரப்பதம் இருந்தால், இரும்புடன் ஒட்சிசன், ஈரப் பதம் ஆகியவை வினைபுரிந்து இரும்பு ஒக்சைட்டாக மாறுகிறது. இதைத்தான் 'துரு' என்கிறாம். இதுதான் இரும்பைத் துருப்பிடிக்கச் செய்துவிடுகிறது. இரும்பு துருப்பிடிக்காமல் இருக்க 'எனாமல் பெயிண்ட்' அடிப்பர். இது இரும்பு மீது ஈரப்பதம் படிவதைத் தடுக்கிறது. இதனால், பல ஆண்டுகளானாலும் இரும்பு பாதுகாப்பாக இருக்கிறது. இப்படி துருப்பிடிப்பதால் அதிகளவில் பாதிக்கப்படுவது கப்பல்கள் தான். கடற்பகுதியில் சோடியம் குளோரைட் அதிகம். அதனால் அங்கு வீசும் இந்த உப்புக்காற்றால் கப்பலில் உள்ள இரும்பால் ஆன பாகங்கள் விரைவில் அரிக்கப் பட்டு விடுகின்றன.

## குறுக்கெழுத்துப்போட்டி - 98

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | ■ | 15 | 16 | ■ |
| 17 | 18 | 19 | 20 | 21 | ■ |
| 22 | ■ | 23 | ■ | ■ | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**இடமிருந்து வலம்**

1. தென்னிந்தியாவிலுள்ள பிரபலமான ஆறு
2. பன்னிரு இராசிகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
13. சிறு கட்டி, இளம் பெண்களுக்கு பெரும் பிரச்சினையாக அமைவது
15. மூச்சை அடக்குவதை இப்படிச் சொல்வர்
17. புணர்ச்சி வகைகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
25. கதியற்றவன், சிவனின் இன்னொரு பெயர் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. நோக்கம், பொருள் விளக்கம்
2. விலங்கு (குழம்பியுள்ளது)
3. நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழ் வருடத்தின் பெயர் (தலைகீழ்)
4. 64 கலைகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
5. காகத்தை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)
6. சோதிடன், கணக்கிடு (தலைகீழ்)
19. வெட்டுவதற்கு பயன்படும் ஆயுதம்
24. கற்றலுக்கான ஏவற் சொல். மேலே செல்ல உதவுவது (தலைகீழ்)

பெயர் : ...................................................

முகவரி : ...................................................

...................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 96 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. நந்தவனம் | 1. நர்த்தனம் |
| 7. மர்மம் | 2. மந்திரி |
| 12. அத்திவாரம் | 3. அதமம் |
| 18. ரிதம் | 4. வரம் |
| 21. பசி | 6. அவாச்சியம் |
| 24. சுயம் | 16. ரம்பம் |
| 27. அலங்காரம் | 24. காசு |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எஸ்.எப்.நஷீஹா,**
**இல. 115, அன்னல் வீதி,**
**மாஞ்சோலைச்சேனை, கின்னியா-03.**

### பாராட்டுப் பெறுவோர்


01. திருமதி சு.ரஞ்சினி, சத்தியசாயி பல்பொருள் வாணிபம், தொட்டிலடி மத்தி. சண்டிலிப்பாய்.
02. என். பிராஷாந்தினி, காலி வீதி, வெள்ளவத்தை.
03. கே.அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
04. எம்.ஏ.அஸ்மா, மதுரங்குளி.
05. எம்.சுரேஷ்குமார், கண்டி.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## தெரிந்துகொள்ளுங்கள்

* உலகிலேயே மிக அதிக அளவிற்த மின் உற்பத்தி செய்யப்படும் நீர்வீழ்ச்சி நயாகரா.
* உலகின் நுழைவாயில்-கனடா நாட்டின் வன்கூவர் நகரம்.
* நீர்நாயின் விலங்கியல் பெயர்-லுட்ரா லுட்ரா
* ஆசியாவிலேயே மிகப் பெரிய ஆவணக் காப்பகம்-டில்லியில் உள்ள இந்திய தேசிய ஆவணக்காப்பகம். (இங்குள்ள புத்தகத் தட்டுகளின் மொத்த நீளம் 70 கிலோ மீற்றர்)
* கங்காரு எலி என்ற ஒருவகை எலி அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதிப் பாலைவனங்களில் வாழ்கிறது. இவை தண்ணீரை குடிப்பதில்லை.
* மின்விசிறியைக் கண்டறிந்தவர்-ஸ்கொட்ஸ் வீலர், 1882.
* ஐரோப்பாவில் பிறந்து, ஆசியாவில் இறந்து, ஆபிரிக்காவில் அடக்கம் செய்யப் பட்ட மன்னர்-மகா அலெக்சாண்டர்.

## பொய்யர்களைக் காட்டிக்கொடுக்கும் கண்ணாடி



பொய் பேசுவோரை எப்படிக் கண்டுபிடிப்பது என்று தலையைப் பிய்த்துக் கொள்கிறீர்களா?

இப்போது ஒரு மூக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்குப் பெயர் 'சோசியல் எக்ஸ்-ரே கிளாஸ்'. அதை அணிந்து கொண்டால் எதிரே பேசுகிறவர்களின் முகபாவனைகளை அது கணக்கிலெடுத்துக் கொண்டு அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை உங்களுக்குக் காட்டிக் கொடுத்துவிடும்.

எதிரே உள்ளவர் நம்முடன் இனிக்க இனிக்க பேசிக் கொண்டே முற்றிலும் ஒத்துப்போகாத எதிரி மனநிலையுடன் இருந்தால் சிவப்பு விளக்கு எரியும். பாதி ஒத்துப்போய் கொஞ்சம் தயக்கத்துடன் இருந்தால் மஞ்சள் நிற விளக்கும் முழுமையாக நம்முடன் உடன்பட்டால் பச்சை நிற விளக்கும் எரியும்.

'உனக்காகவே நான் உயிர் வாழ்கிறேன்' என்று காதலியிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே, இன்னொரு பெண்ணின் மேலும் ஒரு கண் வைத்திருப்பவர்களை எளிதில் கண்டுபிடித்துவிடலாம் இந்த சோசியஸ் எக்ஸ்-ரே கண்ணாடி அணிந்திருந்தால்!

## எல்லாமே மனம்தான்



உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக அரைப்பட்டினி கிடப்பவரா நீங்கள்?

சாப்பிடும் உணவின் அளவைக் குறைக்க இனிமேல் நீங்கள் படாதபாடுபட வேண்டியதில்லை. அமெரிக்காவில் உள்ள சால்ட் லேக் சிட்டியில் ஓர் ஆய்வு நடந்தது. ஓர் உணவகத்தில் சாப்பிடும் சிலருக்கு மிகப் பெரிய முள் கரண்டியைக் கொடுத்தார்கள். இன்னும் சிலருக்கு சிறிய முள் கரண்டியை வைத்தார்கள். எல்லோருக்கும் அதிகமான உணவு ஒரே அளவில் பரிமாறப்பட்டது. சாப்பிட்டு முடித்த பின்பு பார்த்தால், பெரிய முள் கரண்டியில் சாப்பிட்டவர்கள் மிகக் குறைவாகச் சாப்பிட்டிருந்தார்கள். சிறிய முள் கரண்டியில் சாப்பிட்டவர்களோ உணவை ஒரு



கட்டுக் கட்டியிருந்தார்கள்.

என்ன காரணமாம்?

வயிறு நிறைய திருப்தியாகச் சாப்பிட வேண்டும் என்று வருகிறவர்கள் பெரிய முள் கரண்டியில் சாப்பிட ஆரம்பித்ததும் நிறையச் சாப்பிட்டு விட்டதாக நினைத்துக் கொள்கிறார்கள். சிறிய முள் கரண்டியில் சாப்பிடுபவர்களோ குறைவாகச் சாப்பிட்டு விட்டோம். இன்னும்... இன்னும் சாப்பிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். 'கரண்டிக் கதையெல்லாம் நமக்கு ஒத்துவராது... நான் கையில் சாப்பிடுகிற கேஸ்' என்கிறீர்களா? உங்களுக்கும் ஒன்றைச் சொல்லி வைத்திருக்கிறார்கள். எவ்வளவு பசி... அதற்கு எவ்வளவு சாப்பிட வேண்டும் என்று திட்டமிட்டுச் சாப்பிட்டால் போதும் என்கிறார்கள்.

## நம்புங்கள்!



பல் துலக்குவதற்கும் பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதற்கும் தொடர்பு உண்டு என்று சொன்னால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆக வேண்டும்! சில குழந்தைகள் பத்து மாதம் ஆவதற்குள் அவசர அவசரமாக எட்டு மாதத்திலேயே பிறந்து விடுகின்றன. இப்படிக் குறைமாதத்தில் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெண்களை ஆய்வுக்குட்படுத்தினார்கள்.


அவர்களில் முக்கால்வாசிப் பெண்களுக்கு ஈறு நோய்கள் இருந்தன. கருவுற்ற காலத்தில் பெண்களின் ஓமோன் செயற்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறது. இதனால் சில பெண்களுக்கு வாயில் நோய்த் தொற்று ஏற்படுகிறது. ஈறுகளில் இரத்தக் கசிவு ஏற்படுகிறது.

வாயைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாமலிருப்பதால், குறைமாதக் குழந்தை பிறக்கிறது. அதுமட்டுமல்ல, டைப் 2 வகை நீரிழிவு நோய்; இதய நோய்கள், சிறுநீரக நோய்கள், இரத்தநாள நோய்கள் போன்றவை ஏற்படவும் வாய்ப்புள்ளதாம்! மேற்கு அவுஸ்ரேலியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இதைக் கண்டறிந்துள்ளனர்.

## மனிதன் எழுந்து நின்றது எப்போது?

விலங்குகளிலிருந்து மாறுபட்டு மனிதன் எப்போது தரையிலிருந்து கைகளை தூக்கி எழுந்த நிமிர்ந்து கால்களை ஊன்றி நிற்கவும் நடக்கவும் ஆரம்பித்தான்? இது வரையிலும் கிடைத்த ஆதாரங்களின் படி சுமார் 1.9 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு என்பதுதான் நாமறிந்த தகவல்.ஆனால் 3.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே கால் தடம் பதித்த மனிதன் குறித்த தகவல்கள் தற்போது வெளியாகி இருக்கின்றது.

தன்சானியாவிலுள்ள லேடோலி என்னுமிடத்தில் பாறைப் படிமங்களில் 11 மனித கால் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.இந்த கால் தடங்கள் சிம்பன்சிக்கள்,உரங்க் உட்டான்கள் மற்றும் கொரில்லாக்களின் பாத அமைப்பிலிருந்து வேறுபடுகின்றன. இதற்கு முன்பு இதே போல் காணப்பட்ட காலடி சுவடுகள் ஒன்றே ஒன்றாக இருந்ததனால் அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது இயலாமல் போயிற்று. ஆனால் தற்போது கிடைத்துள்ள 11 சுவடுகளினால் ஒப்பிட்டுப் பார்ப்பது சுலபமாகி இருக்கிறது.இன்றைய நாகரீக மனிதனுக்கு இதுவே முன்னோடி என்று கருதப்படுகிறது.



ஆதி மனிதன் இரண்டே பிரிவு தான் என்பது நாம் அறிந்தது.ஒன்று ஆபிரிக்காவை மையாகக் கொண்டது.மற்றொன்று நியாண்டர்தாலை ஆதாரமாகக் கொண்டது.தற்போது கண்டுபிடிக்கப்பட்ட ஆதி மனிதனின் எக்ஸ் க்ரோமோசோம்கள் நியாண்டர்தால் மனிதனிடமிருந்து தோன்றியிருக்க வேண்டுமெனவும் அது நிச்சயமாக ஆபிரிக்காவைச் சேர்ந்த மனிதனுடையதல்ல என்றும் ஒரு ஆராய்ச்சி தெரிவிக்கிறது.இந்த இரண்டு பிரிவும் ஒரு கால கட்டத்தில் ஒன்றுடன் ஒன்று கலந்திருக்க வேண்டுமெனவும் அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கிறது.


நியாண்டர்தால் மனிதனின் முன்னோர்கள் சுமார் 4 இலட்சத்திலிருந்து 8 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவை விட்டு வெளியேறி தற்போதைய பிரான்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி மற்றும் ரஷ்யா பகுதிகளில் கடந்த 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை வாழ்ந்திருக்க வேண்டுமென அந்த ஆய்வில் மேலும் தெரியவந்துள்ளது.அதேநேரத்தில் தற்போதைய நாகரீக மனிதன் சுமார் 50 ஆயிரத்திலிருந்து 80 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவிலிருந்துதான் வெளியேறிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.உடல் பலமும் பகுத்தறிவும் பெற்றிருந்த நியாண்டர்தால் மனிதனுக்கு தற்போதைய நாகரீக மனிதன் தோன்றிய இனத்தோடு தொடர்பு இருந்ததா? என்ற கேள்விக்கு ஆம் என்பது தான் பதில். நியர்ண்டர்தால் மனிதனும் தற்கால நாகரீக மனிதனும் ஒருவருடன் ஒருவர் இரண்டற கலந்து போனவர்கள் தான் என்பதும் ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

இறுதியாக விஸ்வரூபத்துக்கு விடியலைத் தந்திருக்கிறார் கமல். ஆமாம், இந்த மெகா பட்ஜெட் படத்தின் படப்பிடிப்புத் தொடங்கிவிட்டது. கமல் படங்களில் அதிகம் குழப்பத்தை விளைவித்த படம் என்ற பெருமை தொடங்குவதற்கு முன்பே விஸ்வரூபத்துக்குக் கிடைத்துள்ளது. லொகேஷனில் தொடங்கி இசையமைப்பாளர் வரை எல்லாவற்றிலும் குழப்பம் ஒரு வழியாக எல்லாம் கலங்கித் தெளிந்துள்ளன. நடிப்பதுடன், விஸ்வரூபத்தை கமல் இயக்கவும் செய்கிறார். இந்தப் படத்துக்காகச் சென்னை புறநகரில் பிரமாண்ட அரங்கு அமைக்கப் பட்டுள்ளது.

# சோழர் காலக்கதை கரிகாலன்

ரொம்ப யோசித்துத்தான் புதியவர்களின் படத்தில் நடிக்கிறார் விக்ரம். அதிலும் சமீபகாலத் தோல்விகள் அவரை ரொம்பவே யோசிக்க வைத்துள்ளன. இருந்தும் அறிமுக இயக்குநர் கண்ணன் இயக்கத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றால் கதைதான் காரணம்.

சுசீந்திரன் இயக்கத்தில் ராஜபாட்டை படத்தில் நடித்துவரும் விக்ரம், கண்ணன் இயக்கத்தில் கரிகாலன் என்ற படத்திலும் நடித்து வருகிறார். மெகா பட்ஜெட் படம். கிளாடியேட்டர் மாதிரியான சரித்திரப்படம். இதில் சோழர் காலக் கதையைச் சொல்லவிருக்கிறாராம் இயக்குநர் கண்ணன். படத்தின் விளம்பரத்தை வெளியிட்டாலும் பட வேலைகள் பல மாதங்களாக நடந்து வருகின்றன. படப்பிடிப்பும் தொடங்கி விட்டது.


விக்ரம்

## தமிழில் காஜலின் தங்கை



காஜல் அகர்வாலின் கண்கள் கோழி முட்டை என்றால் அவரது தங்கச்சி நிஷா அகர்வாலின் கண்கள் குருவி முட்டை. ஆனால், இரண்டுமே வாலிப தேசத்தின் வாளிப்பான புரோட்டீன் என்பது மட்டும் சத்தியம். இஷ்டம் படத்தின் மூலம் தமிழிலும் அறிமுகமாகிறார் நிஷா. ஏமைந்தோ ஈவே[illegible] என்ற தெலுங்குப் படத்தைத்தான் தமிழில் இஷ்டம் என்ற பெயரில் ரீமேக் செய்கிறார்கள். அதில் நடித்த அதே நிஷாவையே தமிழுக்கும் தள்ளிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆக அதிர்ஷ்டம் குடி கொண்டிருப்பது அக்கா,தங்கைகளின் அழகு வதனத்தில் கண்களில் ஆரம்பிச்சு இதயத்தில் முடிகிற காதல் பார்த்திருக்கிறோம். அப்புறம் கல்யாணம், கட்டில் என்று போகும் வாழ்க்கை. ஆனால், இப்போது எல்லாமே தலைகீழ். டேட்டிங்கில்ல ஆரம்பித்து அப்புறம்தான் ரிவர்சில் போய் ஐ லவ் யூவில் முடிகிறது. அந்தளவுக்கு வேகம். இந்தக் கதையை அப்படியே தமிழில் ரீமேக்கினால் பொருத்தமாக யார் இரு[illegible]பார் என்று யோசித்தபோதே சட்[illegible]றென்று மூளைக்குள் வந்து எஸ் பாஸ் சொன்னவர் விமல்தான் என்கிறார் இப்படத்தின் இயக்குநர் நிஸார். இதுவரை நீங்கள் பார்த்த விமல் இந்தப் படத்தில் காணாமல்போய் அழகான சொப்ட்வெயார் ஆசாமி உங்கள் முன் நிற்பார் என்றால் அதற்கு நிசார்தான் காரணம். விமல் மனைவிக்கே இந்த வேடத்தில் அவரை அடையாளம் தெரியவில்லையாம். தெலுங்குப் படத்தில் இருந்து தமிழில் மொழி மாற்றம் செய்யும்போது அப் படத்தில் இருந்தவர்கள் இரண்டுபேர் இருந்தால் போதும் என்று நினைத்தாராம் நிஸார். அதில் ஒருவர் தான் இந்த நிஷா அகர்வால். மற்றொருவர் அம்மா வேடத்தில் நடித்த பிரகதியாம்.

Saturday சினிமா

# த்ரிஷாவோடு நடித்த அம்மா



நடிகை த்ரிஷாவும் அவரது அம்மா உமா கிருஷ்ணனும் ஒரு விளம்பரத்தில் இணைந்து நடித்துள்ளனர். அது பாசுமதி அரிசி பிராண்ட் ஒன்றின் விளம்பரம். மதராசப்பட்டினம் புகழ் விஜய் இயக்கியுள்ளார். எந்திரன் கமராமன் ரத்னவேலுதான் ஒளிப்பதிவு. இந்த விளம்பரத்துக்கு ஒரு பிரபல நடிகை மற்றும் அவரது அம்மா இணைந்து நடித்தால் நன்றாக இருக்கும் என இந்த நிறுவனம் கூறியுள்ளது.

உடனே விஜய் த்ரிஷாவை அணுகி விடயத்தைச் சொல்ல உடனே ஒப்புக்கொண்டாராம். த்ரிஷா அம்மா உமாவுக்கும் இதில் ஏக சந்தோஷமாம். அம்மாவுக்கும் மகளுக்கும் கணமான சம்பளமாம் இந்த விளம்பரத்துக்கு. இது குறித்து த்ரிஷா கூறுகையில்;


அம்மாவுடன் இணைந்து இந்த விளம்பரத்தில் நடித்தது மிகவும் சந்தோசமாக இருந்தது. இதுபற்றி நான் கூறுவதை விட சம்பந்தப்பட்ட விளம்பர நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவிப்பதுதான் சரியாக இருக்கும். ஆனால், சந்தோசத்தை வெளிப்படுத்தவே இந்தத் தகவலை சொல்கிறேன் என்றார். இதே விளம்பரத்தை இந்தியில் ஷர்மிளா தாகூர், அவர் மகள் நடிகை சோஹா அலிகானை வைத்து எடுத்துள்ளனர்.

ரதிநிர்வேதம் ரீமேக்கில் நடித்த பிறகு ஸ்வேதா மேனன்தான் மலையாளத்தின் நம்பர் வன் நடிகை. இவரை முன்னிறுத்தி திரையரங்குக்கு வரும் ரசிகர்கள் நிறைய மலையாள ரசிகர்களைத் தொடர்ந்து குஷிப்படுத்தும் விதமாக ஆக்ட்ரஸ் என்ற படத்தில் ஸ்வேதா மேனன் நடித்து வருகிறார். விஷயம் இதுவல்ல. வசந்தபாலனின் அரவான் படப்பிடிப்பு போய்க் கொண்டேயிருக்கிறது. பசுபதி, ஆதி, அர்ச்சனா கவி, தன்ஷிகா, பரத் என்று நீளும் நட்சத்திரப் பட்டாளத்தில் புதிதாக ஸ்வேதா மேனனையும் சேர்த்திருக்கிறார்கள்.

# ஏழாம் அறிவை வாங்கிய சன்

ஏழாம் அறிவு படத்தின் சேட்டிலைட் உரிமையை வாங்கியிருக்கிறது சன் ரி.வி. விலை? சுமார் ஏழு கோடி என்கிறது கோடம்பாக்கத்து குருவி. அது மட்டுமல்ல, இப்படத்தின் பாடல் வெளியீட்டு விழாவையும் நேரடியாக ஒளிபரப்பப் போகிறதாம் சன். ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சூர்யா, ஸ்ருதிஹாசன் நடிக்கும் இப்படத்தை பெரிய விலை கொடுத்து வாங்க அத்தனை சேனல்களுக்கும் அடிதடி போட்டி. ஆனால், உதயநிதி ஸ்டாலின் தயாரிக்கும் படங்கள் எல்லாமே கலைஞர் ரி.வி. அல்லது விஜய் ரி.வி. தவிர வேறெந்த சனல்களுக்கும் கொடுப்பதில்லை அவர். இந்த நிலையில்தான் சன் குழுமத் தலைவர் கலாநிதிமாறனும் உதயநிதியும் சந்தித்திருக்கிறார்கள். மாறன் டவர்சில் நடந்த இந்த சந்திப்பில் கைமாறியது ஏழாம் அறிவு. முழுப் படத்தையும் வாங்கி வெளியிட சன் தயாராக இருந்தும் தற்போதைக்கு சனல் உரிமை வரைக்கும்தான் கொடுத்திருக்கிறாராம் உதயநிதி. செப்டெம்பர் 10 ஆம் திகதி சிங்கப்பூரில் இப்படத்தின் பாடல் வெளியீட்டு விழா நடைபெறவிருக்கிறதாம்.





வேலாயுதம் – விஜய், ஹன்சிகா

# பேரறிவாளன் கதை படமாகிறது

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக மூன்று பேருக்கு விதித்த தூக்குத் தண்டனை, கருணை மனு நிராகரிப்பால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இது தண்டனை அல்ல. சட்டப்படி நடக்கவிருக்கும் படுகொலை. இதனைத் தடுத்து நிறுத்த அனைத்து தரப்பினரும் போராடி வருகின்றனர். இது மூவரின் உயிர்ப் பிரச்சினை என்பதைத் தாண்டி ஜனநாயக மீட்புப் பிரச்சினையாகவே பார்க்கப்படுகிறது. இந்த மூவரில் பேரறிவாளனின் கதை கல்லையும் கரைக்கக் கூடியது. எவ்வித நியாயமுமின்றி இந்த இளைஞனின் மீது மரணத்தின் நிழலைப் படியச் செய்திருக்கிறது அதிகாரவர்க்கம். பேரறிவாளனின் கதையை சினிமாவாக்கும் முயற்சியில் இயக்குநர் ரவி இன்பா இறங்கியுள்ளார். இந்தப் படத்தில் பேரறிவாளனராக அதர்வா நடிப்பார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன் இயக்குநர் சேரன் மற்றும் நடிகைகள் ரேவதி, ரோஹிணி ஆகியோர் வெங்காயம் திரைப்படத்தைப் பார்த்தார்கள். வியப்பும் நெகிழ்ச்சியுமாக அப்படத்தின் இயக்குநர் சங்ககிரி ராஜ்குமாரை பாராட்டு மழையில் நனைத்துவிட்டார்கள். இன்னும் ஒரு படி மேலே போன சேரன் அவரை கட்டியணைத்துக் கொண்டாராம். இந்தப் படத்தை சாதாரணமா வெளியிட்டு விட்டீர்களே, இன்னும் சிறப்பாக மல்ட்டிபிளக்ஸ் தியேட்டர்களிலேயே வெளியிட்டிருக்கலாமே? நடந்தது நடந்து போச்சு. இனி இந்தப் படத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு என்னுடையது என்றாராம். எங்கேயோ கிராமத்தில் பிறந்து இவங்களையெல்லாம் பார்த்து சினிமாவுக்கு வந்த எனக்கு இதைவிட வேறென்ன கௌரவம் வேணும் என்று கண்கலங்குகிறார் வெங்காயம் ராஜ்குமார்.



மங்காத்தா – அஜித், த்ரிஷா

# தமிழரை கவருமா 'உறுமி'

சந்தோஷ் சிவன் மலையாளத்தில் இயக்கிய படம் உறுமி. வாஸ்கொடகமவின் மரணத்தைப் பின்புலமாக வைத்து அவர் இயக்கிய சரித்திரப்படம். பிருத்விராஜ், ஜெனிலியா, பிரபுதேவா, தபு நடித்திருந்த இந்தப் படம் மலையாளத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றது. சென்ற வாரம் இப்படம் தெலுங்கில் வெளியானது. முதல் மூன்று தினங்கள் அபாரமான வசூல் என்கின்றன ஹைதராபாத்திலிருந்து வரும் செய்திகள். உறுமி தமிழில் செப்டெம்பர் 9 ஆம் திகதி வெளியாகிறது. தெலுங்கைப் போல பிரமாண்டமான இசை வெளியீட்டு விழாவைத் தமிழிலும் நடத்த சந்தோஷ் சிவன் தீர்மானித்துள்ளார். திகதி இன்னும் முடிவாகவில்லை. கேரள, ஆந்திர ரசிகர்களைப் போல தமிழ் ரசிகர்களும் படத்தை ஏற்றுக்கொள்வார்களா? என்பதை அறிய ஆவலாக இருப்பதாக சந்தோஷ் சிவன் தெரிவித்தார். கைதூக்கி விடுவதிலும் காலை வாருவதிலும் நம்மவர்களுக்கு ஈடு இணையில்லை, உறுமியை என்ன செய்யப் போகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# நான் நிரபராதி என்று கத்தும்போதே என் குரல்வளையை தூக்குக் கயிறு நசுக்குமோ...?

நான் நிரபராதி,நான் நிரபராதி என்று கத்திக் கொண்டிருக்கும்போதே என் குரல்வளை தூக்குக் கயிற்றால் நசுக்கப்படுமோ என்று இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் பேரறிவாளன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது குடும்பத்திற்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது;

பேரன்புமிக்க அம்மா,அப்பா,சகோதர,சகோதரிகளே,

வணக்கம். நான் அ.ஞா.பேரறிவாளன். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 19 வயதில் பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அதன் விளைவாய் தூக்குத் தண்டனை பெற்றவனாக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் இருந்து வருபவன். என் முனையளவும் தொடர்பே இல்லாத வழக்கில் அரசியல் காழ்ப்புணர்ச்சியாலும் கேட்க நாதியற்றவன் என்பதாலும் அநீதியான தீர்ப்பைச் சுமந்து நிற்பவன்.

தந்தை பெரியாரின் கொள்கையால் நிரம்பிய குடும்ப வழி வந்தவன் என்பதால், மனிதநேயத்தின் அடிப்படையிலும் தொப்புள் கொடி உறவு என்பதால் இன உணர்வின் அடிப்படையிலும் சிங்கள இனவாதத்திற்கு எதிரான ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து அதற்காக தமிழக மண்ணில் அரசியல் செயல்பாடுகளை முன்னெடுத்தவன் என்ற காரணத்தால் என் மீது தவறான குற்றச்சாட்டுப் புனையப்பட்டது என்பதை தங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

19 வயது இளைஞனாய் கைதுசெய்யப்பட்டு வாழ்வின் வசந்த காலங்களையெல்லாம் சிறையில் செய்யாத குற்றத்திற்காக தொலைத்து இன்று 40 வயதுடன் பக்குவப்பட்ட குடிமகனாய் உங்கள் முன் இக்கடிதத்தின் மூலம் பேசுகிறேன்.

ராஜீவின் கொலையை நியாயப்படுத்துவதல்ல இக்கடிதத்தின் நோக்கம். மாறாக இக்குற்றத்திற்கு எவ்வித தொடர்புமில்லாத நானும் என்னைப் போன்றவர்களும் மரணதண்டனைக்குரியவர்கள் அல்லர் என்று எடுத்துரைப்பது மட்டுமே.

ராஜீவ் கொலை விடயமாக விசாரிக்க வேண்டும் என்று சொல்லி 11.06.1991 அன்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட நான் இன்றுவரை நீதி மறுக்கப்பட்டு தூக்கு மரத்தின் நிழலிலேயே வாழ்ந்து வருகிறேன்.

அக்கொலைக்குப் பயன்பட்ட பெல்ட் குண்டு செய்வதற்கு நான் உதவினேன் என்பதே என் தண்டனைக்கு வழிவகுத்த குற்றச்சாட்டு. இதற்கு ஏதுவாக ஊடகங்களில் பொய்ச் செய்தி பரப்பப்பட்டது. இந்தியா ருடே நாளிதழும் நான் எப்படி வெடிகுண்டு செய்தேன் என்று பொய்யாக ஒரு செய்முறை விளக்கம் வெளியிட்டிருந்தார்கள். ஆனால், சி.பி.ஐ.யால் இறுதிவரை கண்டுபிடிக்க முடியாத கேள்விகளுள் ஒன்று அந்தபெல்ட் குண்டை செய்தவர் யார் என்பதே என்று.

விடை தெரியாத கேள்விக்கு விடையாக நான் பலியிடப்பட வேண்டுமா?

அந்த பெல்ட் குண்டிற்கு 9வி பேட்டரி வாங்கித் தந்தேன் என்பதன் மூலமே நான் அந்த பெல்ட் குண்டைச் செய்தேன் என வழக்குரைத்தனர் அரசு தரப்பு வழக்கறிஞர்கள். அதற்கு வசதியாக என்னுடைய மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியலின் பட்டயப் படிப்பும் இவர்களின் கதைக்கு கருவானது. ஆனால், வழக்கின் எந்தவொரு இடத்திலும் நான் வாங்கித் தந்த 9வி



பேட்டரிதான் பெல்ட் குண்டு வெடிக்கப் பயன்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லை.

உண்மை என்னவெனில் நான் 9வி பேட்டரியை வாங்கவுமில்லை. அதனை யாருக்கும் தரவுமில்லை. ஆனால், நான் 9வி பேட்டரி வாங்கினேன் என்பதற்குவழக்கிலுள்ள ஒரே ஆதாரம் ஒரு பெட்டிக் கடைக்காரரின் சாட்சிதான். இந்தச் சாட்சியை ஏற்க முடியாது என்று தடா நீதிமன்றத்தில் கூறிய நீதிபதி, பிறகு என்ன காரணத்தினாலோ இந்தச் சாட்சியை ஏற்றுக் கொண்டுவிட்டார். நான் வாங்காத பேட்டரியை வாங்கினேன் என்று ஒருவர் மூலம் சொல்ல வைப்பது நம் காவல்துறைக்கு எத்தனை சுலபம் என்று சற்றே சிந்தியுங்கள்.

தடாச் சட்டத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டதே தவறு என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. காரணம் இந்தக் கொலைக் குற்றவாளிகளுக்கு கொலை செய்யப்பட்டவர்களைத் தவிர யாதொருவரையும் அச்சுறுத்தவோ, கொல்வதோ நோக்கமாக இருந்திருக்கவில்லை என்று எடுத்துரைத்தது. அப்படியிருக்கும் வேளையில் எங்களை தடாச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து உரிமைகள் மறுக்கப்பட்டு தடா சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு பெறப்பட்ட வாக்கு மூலம் மட்டும் எப்படிச் செல்லுபடியாகும்?

மேலும் நம் நாட்டில் வாக்கு மூலங்கள் எப்படிப் பெறப்படுகின்றன என்பதும் உங்களுக்கு நன்றாகவே தெரியும். கடுமையான சித்திரவதை,மிரட்டல், அடி உதைக்குப் பயந்துதான் பல வாக்குமூலங்கள் இரத்தத்தால் கையெழுத்தாகின்றன. பொதுவாக அப்படிப் பெறப்படும் வாக்குமூலங்களை மட்டுமே வைத்து நீதிமன்றங்கள் தீர்ப்பினைத் தருவது கிடையாது. ஆனால், என் வழக்கில் மட்டும் நீதிமன்றம் அவ்வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வேறு எந்த ஆதாரமும் இல்லாமல் எனக்குத் தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது.

ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்த தியாகராஜன் என்ற அதிகாரி கேரள மாநிலத்தில் 1993 இல் நடைபெற்ற அருட்சகோதரி அபயா கொலை வழக்கை தற்கொலை என முடிக்க அழுத்தம் கொடுத்தவர் என்பதும் அவரது முறை கேட்டை எதிர்த்தால் அவருக்கு கீழ் பணிபுரிந்த துணைக் காவல் கண்காணிப்பாளர் தோமஸ் வர்கீஸ் என்பவர் தனது பதவியைத் துறந்தார் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பிறகு இந்த வழக்கு பாலியல் பலாத்காரம் மற்றும் கொலை என்று திரும்பியது. எர்ணாகுளம் தலைமை நீதிமன்ற நடுவர் 23.06.2000 அன்று அளித்த தீர்ப்பில் கடுமையான கண்டனங்களை வாங்கியவர் இந்த தியாகராஜன். இவர் என்னிடம் வாங்கிய வாக்குமூலங்கள் ஏன் உண்மையாக இருக்க வேண்டும்? யாருக்காகவோ வழக்கை எப்படியும் வளைப்பவர்கள் தானே இவர்கள்.

தடாச் சட்டத்தில் சிறப்பு தனி நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டதால் பெரும்பான்மையான உரிமைகள் எனக்கு மறுக்கப்பட்டன. அதுவே என்தரப்பு நியாயங்களை எடுத்துக்கூற முடியாமல் செய்துவிட்டது. பொதுவாக ஒரு மாவட்ட நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு உயர் நீதிமன்றம், பிறகு உச்சநீதிமன்றம் என்று இரு முறை மேன்முறையீடு செய்யும் வாய்ப்புள்ளது.

இந்தச் செயல்பாடு ஒரு இடத்தில் இல்லாவிட்டாலும் மறு இடத்தில் நீதி சரியாகக் கிடைக்க உதவியது. ஆனால், எங்கள் விடயத்தில் தடா கொடுங்கோல் வழக்கு என்பதால் உயர் நீதிமன்றம் செல்லும் வாய்ப்பு மறுக்கப்பட்டு இரண்டில் ஒரு மன்றத்தின் கதவு அடைக்கப்பட்டுப்போனது. இப்பொழுது தடாச் சட்டம் தவறு என்று அந்தச் சட்டமே நம் நாட்டில் வாபஸ் பெறப்பட்டாலும் அதனால் பாதிக்கப்பட்ட என் போன்றவர்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்? எப்பொழுது கிடைக்கும்?

தடா நீதிமன்றத்தின் கீழ் விசாரிக்கப்படுபவர்கள் 20 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என தடாச் சட்ட வரம்பு சொல்கிறது.

அவர் அதற்கு முன்னால் குற்றம் ஏதும் புரிந்தவரா என்பதைக் கவனிக்க வேண்டும்.

குற்றப் பின்னணி உள்ள குடும்பத்தைச் சார்ந்தவரா என்பதும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்கிறது தடாச் சட்டம்.

எனக்கு மட்டும் இந்த எந்த வரைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் தடாவின் கீழ் கைது செய்து விசாரித்து தண்டனையும் அறிவித்தார்கள்.

சிறப்பு நீதிமன்றத்தில் 26 பேருக்கு தூக்குத்தண்டனை வழங்கப்பட்ட நிலையில் உச்ச நீதிமன்றம் அதில் 22 பேருக்கு தூக்குத் தண்டனையை இரத்துச் செய்கிறதென்றால் இவ்வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் எத்தன்மையுடன் ஒரு தலைப்பட்சமாக முன் முடிவுகளுடன் விசாரிக்கப்பட்டதென்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று இருந்தாலும் இந்த வழக்கைப் பொறுத்தவரை கொல்லப்பட்டவர் ராஜீவ் என்பதாலும் அவருக்கு இருந்த செல்வாக்கு மற்றும் ஊடக அனுகூலங்களாலும் ஒரு தலைப்பட்சமாகவே பார்க்கப்பட்டது. இன்னொரு வாய்ப்புக் கிடைக்கப் பெற்று நடுநிலையுடன் விசாரிக்கப்பட்டால் எங்களது தூக்குக் கயிறும் கண்டிப்பாக அறுபடும் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்.

அந்த வசதி இங்கிலாந்து உள்ளிட்ட மேலை நாடுகளில் உள்ளது. ஆனால், இனி வழக்கை விசாரிக்கும் வழியில்லை என்கிறது இந்திய குற்றவியல் சட்டம். ஆகையால் கருணை மனுவின் மீதான முடிவே இறுதி என்று விடப்பட்ட பரிதாபத்துக்குரியவர்கள் ஆகிப் போனோம் நாங்கள். நான் நிரபராதி. நான் நிரபராதி என்று கத்திக் கொண்டிருக்கும் பொழுதே என் குரல்வளை தூக்குக் கயிற்றால் நசுக்கப்படுமோ?

திருமதி சோனியா காந்தி இவ்வழக்கில் தூக்குத் தண்டனையைப் பெற்றவர்களுக்கு அத்தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் எனக்கோ, என் குழந்தைகளுக்கோ (ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி) சற்றும் விருப்பமில்லை என ஏற்கனவே கூறியுள்ளார்.

ஆயினும் எங்களை 20 ஆண்டுகளாக இப்படிச் சிறையில் அடைத்து வைத்திருக்கும் மர்மம் எங்களுக்கு விளங்கவில்லை. நிரபராதிகளான எங்களை இப்படி தூக்குக் கொட்டடியிலேயே வைத்திருக்கும் காரணம் புரியவில்லை.

1980 களின் இறுதியில் வாழ்ந்த எல்லா இளைஞர்களைப் போலவே நானும் ஈழ விடுதலையிலும் விடுதலைப் போராளிகளின் மீதும் பற்றுக்கொண்டிருந்தேன். அன்று கல்லூரிகளிலும் பணி இடங்களிலும் எல்லோரும் தான் விடுதலைப் போராட்டத்திற்காக உதவி வந்தார்கள்.

ஒருநாள் ஊதியத்தையும் கொடுத்தார்கள். பள்ளிகளில் நன்கொடை வசூலித்தார்கள். ஏன் நம் மத்திய,மாநில அரசுகள் கூடத்தான் அவர்களுக்கு உதவிகள் புரிந்தன? ஒரு துர்ச் சம்பவம் நிகழும்பொழுது நான் மட்டும் எப்படி எதிரியாகிப் போனேன்?ஏன் தனிமைப்படுத்தப்பட்டேன்? உங்களில் ஒருவன் தானே நானும்?

தூக்குத்தண்டனை என்பது சட்டத்தின் பெயரால் செய்யப்படும் திட்டமிட்ட படுகொலை என்கிறார் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர். செய்த குற்றத்திற்கு வழங்கப்படும் தூக்குத் தண்டனையையே திட்டமிட்ட படுகொலையெனில் செய்யாத குற்றத்திற்கு வழங்கப்படும் தூக்குத் தண்டனையை என்னவென்று சொல்வது?

முடிவுறா விசாரணையில் முடிவினை நோக்கித் தள்ளப்பட்டுள்ள அப்பாவி.இவ்வாறு அவர் அந்தக் கடிதத்தில் தன் ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளார்.

## இவ்வார மெயிலில் இவர்...

# பாய்ச்சங் பூட்டியா

துடுப்பாட்டத்தில் சிறந்து விளங்கும் இந்தியா கோடானுகோடி மக்களை கொண்டிருந்தும் உதைபந்தாட்டத்தில் குறிப்பிடத்தக்களவிலான கீர்த்தி பெறவில்லை.

ஆனால்,இந்திய தேசிய அணியின் கப்டனாக இருந்து ஓரளவுக்கேனும் இந்திய உதைபந்தாட்ட அணியை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்ட பாய்ச்சங் பூட்டியா சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இதன் மூலம் பூட்டியாவின் 16 ஆண்டு கால உதைபந்தாட்டப் பயணம் நிறைவுக்கு வந்துள்ளமை இந்திய சர்வதேச உதைபந்தாட்ட ரசிகர்களையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

சர்வதேச அளவில் அதிகளவான ரசிகர்களை கொண்டது விளையாட்டு உதைபந்தாட்டமாகும்.

இந்நிலையில் இந்திய உதைபந்தாட்ட வரலாற்றில் மிகமுக்கியமான இடத்தினைப் பெற்றிருப்பவர் பூட்டியா.

உதைபந்தாட்ட அரங்கில் இந்திய மண்ணிற்கு பெருமை தேடித்தந்தவர் பூட்டியா.

1976 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி சிக்கிம் மாநிலத்திலுள்ள நாம்பி நகரில் பிறந்தார் பூட்டியா.

பாடசாலை நாட்களிலேயே உதைபந்தாட்டத் துறையில் அதிக ஈடுபாட்டினைக் கொண்டிருந்த பூட்டியா,1993 இல் கிழக்கு பெங்கால் அணிக்காக கழகப் போட்டிகளில் பங்குபற்றினார்,இதுவே அணி ஒன்றிற்காக அவர் முதன் முதலில் பங்கு பற்றிய சந்தர்ப்பமாகும்.

அந்த அணிக்காக தனது சிறப்பான ஆட்டத்தினை வெளிக்காட்டி பூட்டியா இரு வருடங்களின் பின்னர் 1995 இல் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

1995 இல் தாய்லாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் விளையாடியமையே அவரது முதலாவது சர்வதேச போட்டியாகும்.

இதேவேளை இதேவருடம் நடைபெற்ற

நேரு கிண்ணத்துக்கான சர்வதேச அளவிலான போட்டியில் உஸ்பெகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியின் போது தனது முதலாவது சர்வதேச கோலைப் போட்டார்.

இதன் மூலம் சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில் இளம் வயதில்[19வயது] கோல் அடித்த இந்திய வீரர் என்ற பெருமை அவரைச் சார்ந்தது.

இதேவேளை,1997 இல் நடைபெற்ற தெற்காசிய கால்பந்து தொடரில் மாலைதீவு அணிக்கு எதிரான இறுதியாட்டத்தில் ஒரு கோலினைப் போட்டு வெற்றிக்கு வித்திட்டார்.

கடந்த 16 வருடங்களாக இந்திய அணியில் விளையாடிய பூட்டியா,2005,2009 இல் தெற்காசிய உதைபந்தாட்டத் தொடரில் இந்தியா கிண்ணம் வெல்வதற்கு உறுதுணையாக இருந்தார்.

இதுவரை 109 சர்வதேச போட்டிகளில் பங்குபற்றிய பூட்டியா 43 கோல்களை போட்டுள்ளார்.

100 சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்ட பூட்டியாவுக்கு 2008 இல் பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.


இவ்வாறான நிலையில் தனது 16 வருட உதைபந்தாட்ட வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் பூட்டியா..


புகழின் உச்சத்திற்கு சென்றாலும் எந்தவொரு மனிதனுக்கும் கவலை இருக்கும் அதற்கு பூட்டியாவுக்கும் விதிவிலக்கல்ல.


காரணம் உலகக் கிண்ணத்திற்காக இந்திய அணியில் விளையாடவேண்டுமென்ற அவரது நீண்டநாள் கனவு நிறைவேறாமல் போயுள்ளது.


ஆனாலும் இந்திய உதைபந்தாட்ட அணி என்றாவது ஒருநாள் உலகக் கிண்ணத்தை தனதாக்கிக் கொள்ளவேண்டுமென்பது பூட்டியாவின் மட்டுமல்ல அனைத்து இந்தியர்களதும் இந்திய அணி ரசிகர்களினதும் அவாவாகும்.




சிரிக்க...
சிந்திக்க...!




இலங்கையில் மர்ம மனிதன் இருப்பதாக செய்தி வருதே
ஒருவேளை நம்ம சொந்தக்காரனோ தெரியல்ல...


புதுசா கிறீஸ் மனிதனும்
வந்திருக்கானே...


உங்கள் துயரத்தை துடைத்தெறிய
நாம் வந்துள்ளோம்...
கைக்குட்டை பிஸ்னஸ்
செய்யுறீங்களா...?


சிலை இல்ல இது. நம்ம மாஸ்டருக்கு
சுளுக்காகிடுச்சி. அவ்வளவுதான்...

# நிறம் மாறும் வைரங்கள்



ஒரு வைரத்தின் ஜொலிப்பு,அதைப் பட்டை தீட்டு பவரின் கைத்திறனைப் பொறுத் தது. ஆனால், வைரத்தின் நிறம் இயற்கையாக அமைவது.

வைரக் கற்களில் பெரும் பாலானவை சற்றுப் பழுப்பு அல்லது வெளிறிய மஞ்சள் நிறம் வாய்ந்ததாக இருக்கும். இவற்றுக்கு கிராக்கி குறைவு. மிகத் தெளிவான அல்லது நீலம் பாய்ந்த வைரங்கள்தான் அதிக விலைமதிப்புக் கொண்டவை ஆகும். இவை அவ்வளவு எளி தில் கிடைப்பதில்லை. அதிக விலை உள்ளதற்கு இதுவும் ஒரு காரணம்.

மிக அபூர்வமான வைரமும் உண்டு. இவ்வகை வைரம், ஆழ்ந்த மஞ்சள் நிறம் பாய்ந்த தாக இருக்கும். ஆனால், ஒளி பட்டதும் இவை பசுமை நிறத்து டன் காட்சியளிக்கும்.

அவ்வளவாக விலை போகாத பழுப்பு அல்லது வெளிர் மஞ்சள் நிற வைரங்களின் நிறத்தை மாற்றி அவற்றின் மதிப்பை உயர்த்த புதிய முறை கண்டறி யப்பட்டுள்ளது.

வைரங்கள்,கார்பன் அணுக் களால் ஆனவை என்பதை நாம் அறிவோம். வைரக்கல் ஒன்றி னுள் ஒரு கார்பன் அணுவைச் சற்று அப்பால் நகர்த்தினால் படிகக் கட்டமைப்பில் மிக நுண்ணிய குறைபாடு ஏற்படும். இவ்விதக் குறைபாடு காரணமாக வைரம் நீலமாக மாறும்.


கார்பன் அணுவை எப்படி நகர்த்துவது? உயர் ஆற்றல் கொண்ட எலக்ட்ரான் அல்லது நியூட்ரானை ஒரு வைரக்கல்லை நோக்கிச் செலுத்தினால் அது கார்பன் அணுவை இடம்பெயரச் செய்கிறது.

மும்பையில் உள்ள பாபா அணு சக்தி ஆராய்ச்சி மைய விஞ்ஞா னிகள் கடந்த சில ஆண்டுகளாக இத்துறையில் ஆராய்ச்சி நடத்தி வைரங்களின் நிறங்களை மாற்ற முடியும் என்று கண்டறிந்துள்ள னர். ஆராய்ச்சியின் பலன்களை வர்த்தக ரீதியில் பயன்படுத்துவ தற்கு வழிசெய்வதிலும் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

மிகுந்த ஆற்றல் கொண்ட நியூட்ரான்களைக் கொண்டு வைரத்தைத் தாக்கும்போது ஒரு கார்பன் அணு இதர கார்பன் அணுக்களையும் இடம்பெயரச் செய்யும். இதன் விளைவாக அந்த வைரம் பசுமை பாய்ந்த நிறத்தைப் பெறுகிறது.

வைரத்தின் மீது நியூட்ரான்க ளைச் செலுத்தும்போது வைரத் தின் உள்ளே பல இலட்சத்தில் சில பங்கு அளவுக்கு ஏற்படுகிற நுண்ணிய குறைபாட்டில் மிகச் சிறு அளவுக்கு கதிரியக்கம் ஏற் படலாம். இச்சிறு அளவிலான கதிரியக்கமும் சில மணி நேரத் தில் போய்விடும். பின்னரும்கூட மிகச் மிகச் சொற்ப அளவுக்கு கதிரியக்கத்தன்மை நீடிக்கலாம். ஆனால், அந்த வைரங்களைக் கையாளுவதில் அல்லது அணி வதில் கதிரியக்க ஆபத்துக் கிடையாது. அவை முற்றி லும் பாதுகாப்பானவையே என்று கூறுகிறார்கள் வல்லுநர்கள்.


# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## செவ்வாய்க் கிரகத்திலேயே உயிரினம் தோன்றியது

அவுஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் உள்ள பில்பாரா மாகாணத்தின் கடைகோடி பகுதியில் ஸ்டெ ரெலி ஏரி உள்ளது. அங்கு சுமார் 3 கோடியே 40 இலட் சம் ஆண்டுக்கு முந்தைய புதை படிவங்கள் கண்டெடுக் கப்பட்டன.

வெஸ்டர்ன் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்க ழக நிபுணர் கள் அவற்றை ஆய்வு செய்தனர். அப்போது அதில் நல்ல முறையில் வளர்ச்சிய டைந்த நோய் ஏற்படுத்தும் பக்றீரியாக்கள் இருந்தன.




ஆனால், புதைவடிவத்தில் இருந்து கண்டுபிடிக்கப் பட்ட இந்த பக்றீரியாக்கள் 3 கோடியே 40 இலட்சம் ஆண்டுக்கு முன்பு வாழ்ந்தவை. அப்போது பூமியில் உயிர் வாழ்வதற்கான ஒட்சிசன் இல்லை. கடல் நீரால் மட்டுமே பூமி சூழப்பட்டிருந்தது. கடும் வெப்பமாகவும் இருந்தது. உயிர் வாழக்கூடிய தட்ப வெப்ப சூழ்நிலை இல்லை.

எனவே, உயிரினம் செவ்வாய்க் கிரகத்தில்தான் தோன் றியிருக்க வேண்டுமென நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

புதை வடிவம் கண்டெடுக்கப்பட்ட பில்பாரா பகுதி செவ்வாய்க் கிரகத்தில் இருந்து விழுந்த வண்டல் மண் சார்ந்த பாறைகளாக இருக்கலாம். அவை மண்ணில் புதையுண்டு படிவங்களாக மாறியிருக்கிறது என்றும் கருதப்படுகிறது.

## எயிட்ஸ் நோய்க்கு தடுப்பூசி வருகிறது...?



எயிட்ஸ் நோயைக் குணப் படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக் கப்படவில்லை. இது தொடர்பாக மருத் துவ அதிகாரிகள் பல வேறு வித ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.


இப்போது நம்பிக்கை தரும் வகையில் விஞ்ஞா னிகள் ஒரு தகவல் வெளி யிட்டுள்ளனர். விரைவில் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசியை உருவாக்கி விடுவோம் என்று அறிவித்துள்ளனர்.

மனிதன் உடலில் இயற்கையாகவே நோய் எதிர்ப்பு சக்திகள் உள்ளன. இதில் அதிக திறன் கொண்ட 17 மூலக்கூறுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதை மேலும் மேம்படுத்துவதன் மூலம் எயிட்ஸ் நோயையும் மனிதர்களுக்கு ஏற்படா மல் தடுத்து விடலாம் என்று அவர் கள் கூறியுள்ளனர்.எனவே, இந்த மூலக்கூறுகளை மேலும் வீரியமாக்க தடுப்பூசி மருந்தை உருவாக்கி வருகின்றனர். விரை வில் இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதனால் எயிட்ஸ் நோயை முன் கூட்டியே தடுத்து முற்றிலும் விரட்டி விடலாம் என்று அவர்கள் தெரிவிக் கின்றனர். இந்தத் தகவல் மருத்துவ அறிக்கை ஒன்றில் வெளியிடப்பட் டுள்ளது.

## 2016இல் விண்வெளியில் நட்சத்திர விடுதி

பூமியிலிருந்து 217 மைல் உயரத்தில் விண்வெ ளியில் அமைக்கப்படவிருக்கும் இந்நட்சத்திர விடுதி 7 பேர் தங்குவதற்கு வசதி யாக நான்கு கேபின்களை கொண்டிருக்கும்.அங்கிருந்து பார்த்தால் பூமி முழுக் கோளவடிவத்தில் அற்புத மாகக் காட்சியளிக்கும்.2016 ஆம் ஆண்டு இவ்விடுதி திறக்கப்படவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறி விக்கப்பட்டுள்ளது.பூமியி லிருந்து சொயுஸ் ராக்கெட் மூலம் பயணிகள் இங்கு கொண்டு செல்லப்படுவர்.பயணத்திற்கு இரு நாட் கள் பிடிக்கும்.




இப்புதிய விடுதி சிறப்பான ஆரோக்கியமான வசதிகளை கொண்டிருக்கும் எனவும் உணவு,குடிநீர் என்பன பூமியிலிருந்து இந்த விடுதிக்கு சப்ளை செய் யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது எனினும் அல்க்கஹோலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்விண்வெளி விடுதி குறித்து இதன் தொழில்நுட்ப குழு தலைவர் செர்ஜி கொச் டென்கோ தெரிவிக்கையில்; இது விண்வெளி ஆராய்ச் சிக்காக பயணம் மேற்கொள் பவர்கள் தங்கிச்செல்லவும் சுற்றுலா நிமித்தம் விண்வெ ளிக்கு வர விரும்புபவர்கள் தங்குவதற்கும் பயனளிக்கும் என கூறுகிறார்.எனினும் 5 நாட்கள் இவ்விடுதியில் தங்குவதற்கு சுமார் 350,000 யூரோ செலவாகும் என்ற தகவல் உலக பணக்காரர்க ளுக்கே கொஞ்சம் கசப்பாக இருக்கிறதாம்.

Saturday மெயில் சிறுகதை

# சீதனம்

உஷா அன்பரசு



செல்வி அப்படிச் செய்வாள் என்று அவள் அப்பாவும் அம்மாவும் நினைத்துக்கூட பார்க்கவில்லை... ஆஸ்பத்திரியில் 'ட்ரிப்ஸ்' ஏறிக்கொண்டிருக்க... அவர்களோடு கதிரும் கவலையோடு உட்கார்ந்திருந்ததை பார்த்து செல்வியின் அம்மா ருக்மணிக்கு கோபம் வந்தது.

'கதிரு... இப்ப திருப்தியா உனக்கு...?'

கதிர் எங்கோ வெறித்தான்.

செல்வியின் அப்பா சங்கரலிங்கம் மனைவியை அதட்டினார். 'ருக்கு! அவனை நொந்துக்காதே. நம்ம நேரத்துக்கு யாரையும் நாம குறை சொல்லக்கூடாது'.

ருக்மணியின் கைகளை பிடித்துக் கொண்டு அவள் தங்கை மகள் கவிதா பேசினாள்.

''பெரியம்மா... நேத்து ஸ்கூல் விட்டு வரும் போதே செல்வி கஷ்டமாகத்தான் பேசினா.. இனிமே என்னால அலங்காரம் பண்ணிக்கிட்டு எவன் முன்னாடியும் நிக்க முடியாது டி.... அம்மா.. அப்பா படற வேதனையை தாங்க முடியலை... கல்யாணம்னு ஒண்ணு நடந்தாகணும்.. என் மாமா கதிரு கால்ல விழுந்தாவது என்னைய கட்டிக்கச் சொல்றேன்று சொன்னா. அந்த நகரத்து மாப்பிள்ளை சம்பந்தம் நின்னு போனதில் அவ ரொம்ப வெறுத்துப் போயிட்ட''

''கவிதா இந்த இருபது நாளா எனக்காக கூட வேண்டலைடி...கடவுளே அவர் நல்லா இருக்கணும்... என்னை நல்லா பார்த்துக்கணும்னு மாஞ்சிமாஞ்சி சொல்லிட்டிருந்தா. பதிலுக்கு நான் அவ கிட்ட அவன் நல்லவனா இருந்தா அவன் அம்மா போடற கண்டிஷனுக்கு வாயை மூடிட்டு இருப்பானா... பேராசை புடிச்சவங்க கிட்ட போய் மாட்டிக்கிட்டு காலமெல்லாம் கஷ்டப்படறதை விட கவலைப்படாம இரு... நல்லதே நடக்கும்னு எவ்வளவோ சொல்லி அனுப்பினேன் சித்தி''

செல்விக்கு என்னவோ... கதிர் மேல்தான் விருப்பம்., சங்கரலிங்கமும் பெண் ஆசைப்படுகிறாளே என்று கதிரிடம் போய் பேசினார். அவனோ ...மாமா.. எனக்கு எந்த யோசனையும் இல்லை.செல்வியை வெளியில கட்டிக்குடுத்திடுங்க என்று சொல்லிவிட்டான்.

ஜாதக தோஷம் அது இது வென்று தள்ளிக் கொண்டு போனதில் செல்விக்கு இருபத்தியெட்டு வயதாகி விட்டது. ருக்மணி போகாத கோயிலில்லை ...போன மாதம் வந்த அந்த நகரத்து வரன் ஜாதகம் பொருந்தியிருந்ததோடு ... மாப்பிள்ளையையும் நன்றாக இருந்தான். பரஸ்பரம் பேசி முடித்துவிட்டு... ஆடிபோகட்டும்... நல்ல நாளாய் பார்த்துக் வருகிறோம்... என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

ஆடி முடிந்து... பதினைந்து நாளாகியும் எந்தத் தகவலும் வரவில்லை.... சங்கரலிங்கமே போன் செய்தார்.

ஏதோ ஜாதகம் பொருந்தியிருக்கேன்னுதான் பார்த்தோம்... பொண்ணுக்கு படிப்பும் கம்மி.. நர்சரி ஸ்கூல்ல வேலை பார்க்கிறது. இது எல்லாம் எங்க சொந்தக்காரங்க குறைச்சலா நினைப்பாங்க... அதனால எழுபது பவுண் போட்டு வீடு வாங்கித் தருவதா இருந்தா மேற்கொண்டு யோசிக்கலாம். மாப்பிள்ளையின் அம்மா கறாராய் சொன்னாள்.

நகை கொடுத்து கல்யாணம் பண்ணவே கடன்பட்டு செய்ய இருக்கும் சங்கரலிங்கத்திற்கு அந்த அம்மாவின் பேச்சு தட்டிக் கழிப்பதாகவே பட்டது.

அப்பா இந்த இடமே தேவையில்லை அக்கா போற இடத்துல சந்தோஷமா இருக்கணும் விலைவாசி ஏர்ற மாதிரி திடீர் நகையை ஏத்தறவங்க செல்வியை நல்லவா வச்சிப்பாங்க? மகேஷ் கோபமாய் கத்தினான்.

ருக்மணிக்கு அழுகையாய் வந்தது. கடவுளே என் பொண்ணுக்கு நல்ல வழி காட்டமாட்டியா..? என்னங்க நீங்களும் தான் உங்க பிடிவாதத்தை விட்டு கதிரு கிட்ட பேசி பார்க்க வேண்டியதுதானே.

என்னால முடியாது. ஒரு தடவை கேட்டதுக்கு யோசனையில்லைன்னுட்டான். செல்வியை கட்டிக்குடுக்க கதியில்லாம தான் மாமா நம்ம தலையில கட்டப் பார்க்கிறார்ன்னு அவன் நினைக்கணுமா! தலையெழுத்து பிரகாரம் நடக்கட்டும்.

செல்விக்கு இரவெல்லாம் மனசு வலித்துக் கொண்டிருந்தது.ஸ்கூலில் ஒரு சிலர் ஏ செல்வி நீயே எவனையாவது பார்த்து கட்டிக்கிடு இப்ப

ஏன் இப்படி செஞ்சே.. உன்னை பிடிக்கலைன்னா சொன்னேன்.. உன் அத்தை என் தலையில் குடும்பச் சுமையை தூக்கி வெச்சிட்டுப் போனபிறகு என்னைப் பத்தியோசிக்கவே இல்லை. ஜானகி,மலர் இரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணணும்... முரளியையாவது படிக்க வைக்கணும். இதெல்லாம் முடியறதுக்குள்ளாற எனக்கு வயசாயிடும் நீயாவது நல்லா இருக்கனும்னு தான் மனசை தள்ளி வைச்சிட்டு வெளியில பார்க்கடியே ஒண்ணு ஒண்ணா பார்த்திட்டிருந்தா நீ அவ்வையாராகி விட வேண்டியதுதான். கிண்டல் வார்த்தைகள் நெருஞ்சி முள்ளாய் குத்த அப்பாவின் தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டாள். செல்வியின் மொபைல் ரொம்ப நேரம் அடித்துக் கொண்டிருக்க எட்டிப்பார்த்த அம்மா ருக்மணி பதறிப்போய் போட்ட கூச்சலில் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

துவண்டு போன கொடியாய் இருந்த செல்வி கண் விழித்ததும்.. கதிர் கலங்கின குரலில் பேசினான். செல்வி சொல்லி மாமா கிட்ட சொன்னேன். இவ்வளவு தூரம் ஆகிட்ட பிறகு வெளிப்படையாவே கேட்கிறேன். செல்வி நீயும் என் கஷ்டத்துல பங்கெடுத்துக்குவியா?

செல்வி மெல்ல தனது கைகளை நீட்டி கதிரின் கைகளை பற்றிக்கொண்டாள். இருவரும் கண்ணீரையே மாலையாக்கி கோர்த்து அன்பை பரிமாறிக் கொண்டார்கள். கதிர் இப்போது புன்னகை மாறாமல் மாமாவிடம் சொன்னான். இப்படி: அப்புறம் என்ன மாமா அடுத்த முகூர்த்த திகதி எப்பன்னு பாருங்க...

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## கலைஞர்களே கேளுங்கள்

கலைஞர்களே...
கொஞ்சம் கேளுங்கள்!
காதலையும், கன்னியையும்
கருவாக கொண்டு...
கவி வடித்தது போதும்!

பாவம்! அந்தோ...
அநாதரவாக...
கேட்பார் அற்று
கேட்டுப் பெற
'வாயும் அற்று'

நாளுக்கு நாள்...
நசுக்கியும்;
பொசுக்கியும்;
வெட்டியும்;
கொத்தியும்;
குடைந்தும்;
கொடுமை செய்து
சூறையாடப் படுகின்றது....

எம் இயற்கை
அன்னையின்
வாரிசுகளான...

நீர்!
நிலம்!
காற்று!
கடல்!
ஆகாயம்!
என அனைத்தும்...

இவைகளை காத்தால்
என்றோ... நம்மை
போன்று நம்....
வருங்கால சந்ததியினரும்
வாழலாம் சுகமாக...!

வாருங்கள் தோழர்களே.
உங்கள் கருவாக
எம் இயற்கை
அன்னையையும்
உள்வாங்கி உங்கள்
பொன்னான கருத்துகளால்
காத்தருளுங்கள்!

ஒன்று பட்டால்தானே
உண்டு வாழ்வு!!

**பரகடுவ**
**கே.எம்.சம்ஸ்**

## பூப்படையக் காத்திருக்கும் மரங்கள்



வீதியோர மரங்களெல்லாம்
வசந்த காலத்தின்
வனப்பான ஆடைகளை
களைந்து விட்டு
இலையுதிர் காலத்திலே
அரைதறை ஆடைகளைத்
தான்
அணிகின்றனவே!

தீராத நோயினால்
அவதிப் படுபவர்களும்
முதுமை அடைந்தவர்களும்
மரணிப்பது போல்
பழுத்த இலைகளெல்லாம்
நாள் தோறும் விழுந்து
விழுந்து
மண்ணோடு
மண்ணாகின்றனவே!

இந்த மரங்களெல்லாம்
மழைக்கும் வெயிலுக்கும்
தடைகளாய் நம்மைப்
பாதுகாக்கவும்
கடும் வெப்ப காலத்தில்
விசிறியாகவுமல்லவா
சேவை செய்கிறது
அரைதறை ஆடைகளணிந்த
மரங்களெல்லாம்
அதன் பருவகாலத்தை காத்து
நிற்கின்றனவே மீண்டும்
பூப்படைவதற்காய்!

**எம்.எம்.அலிஅக்பர்,**
**கிண்ணியா.**

## என் இணையும் துணையுமாய்...

அன்னையின் தாலாட்டும் நீ
இறையவனின் நுட்பமும் நீ
ஊராரின் பிரம்மிப்பும் நீ
எனக்கென்றும் வழிகாட்டும்
கலங்கரையும் நீ தானோ?...

கண்களில் உனைக்காணாது
மௌனமாய் உன்னோடு பேசாது
உன் சுவாசம் என்னுள் சேராது போகும்
காலங்கள் அசையாது உறைந்திடுமோ?...
ஆற்றுக்குள் மூழ்கும் தாமரையாய்
சிப்பியில் மறைந்த முத்தாய்
கடலோரம் கலந்த சிலிக்கானாள்
எனக்குள் என்றும் என்னவள்...

இடியை விட வேகமாய்
எனக்குள் நுழைந்து கொண்டவள்
மின்னலைக்காட்டிலும் அவசரமாய்
கண்களைக் கடந்து சென்றவள்
அரிசோனா பள்ளத்தாக்கினை
என் மனதில் உண்டாக்கியவள்
அவள் தானே என்றென்றும்
என் இணையும் துணையுமாய்....

**மு.மு.சாஜஹான், கல்முனைக்குடி-2, கல்முனை.**

## உன்னால்...

றோஜா மலர்
பிடித்திருந்தது
நீ கூந்தலில்
அணிந்ததால்

நிலவை
இரசித்தேன்
உன்வதனம்
கண்டதால்

தாமரை இலையின்
நீர்த்துளியை
இரசித்தேன்
உன் முகப்பரு
ஞாபகத்தால்.

உன் கண்களின்
கதிர்கள்
என் கண்களில்
பட்டபோது
கவிஞனானேன்

**ஆ.முல்லைதிவ்யன்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில் வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...




## தெய்வீகக் காதல்




மனிதரைக் காதலித்தால்
வருவதெல்லாம் துன்பம் தான்
அதனால் தான்
நான் இப்போது
கடவுளைக் காதலிக்க
ஆரம்பித்திருக்கிறேன்
இன,மொழி
சாதி வேறுபாடு எதுவும்
என் காதலுக்கில்லை
காமம் கடந்த என் காதல்
உருவமில்லாதது
ஆனால்,
சுதந்திரமானது...!
உறவுகளின் எதிர்ப்புக்கள்
எதுவுமற்ற என் காதல்
உண்மையானது
புனிதமானது
என் காதலை எவராலும்
எளிதில் உணர்ந்து
கொள்ள முடியாது
ஏனெனில் இது
மனித ஆசைகள் உணர்வுகள்
அனைத்துக்கும்
அப்பாற்பட்ட
தெய்வீகக் காதல்

**குறிஞ்சிக்கவி-செ.ரவிசாந்,**
**வீரமனை, குப்பிளான்**

## இரவுக்கோர் விடியல்

சேராத விழிகள் - அதில்
சேரதுடிக்கும்
இதயம்...
ஏங்காத நெஞ்சம் -
அங்கே
ஏக்கங்களோடு ஒரு
ஜீவன்...
நம் மனங்கள்
சேர்ந்தாலும்
கூட நம்மை
சேரவிடாது துடிக்கும்
உருகாத நெஞ்சம்
கொண்ட பேரினம்...
காதல் சுகமானது
என்றால்
சுமைகளும் சுகமானதே
காத்திருப்போம்
இரவுக்கும் ஓர் விடியல்
உண்டு...!

**சிநேகிதன்,**
**லுணுகலை.**

# மகளிர் மதிப்பை உயர்த்தும் புடவைகள்

பெண்ணின் பெருமையையும் மதிப்பையும் உயர்த்தும் ஆடைகளில் புடவைக்குத் தனி இடம் உண்டு. நவநாகரிகமாய் இருக்கும் பெண்கள் கூட புடவை கட்டும்போது சபையில் அவர்களுக்குக் கிடைக்கும் மரியாதையே தனிதான்.

பெண்களின் அழகை சிறந்த முறையில் வெளிக்காட்டுவது மட்டுமன்றி, சிறப்பானதொரு தோற்றப்பொலிவையும் புடவை தருகிறது. இந்தியாவில் மட்டுமே சேலை உடுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவில் சேலைகளின் பயன்பாடு மிக அதிகம். பெரும்பாலும் திருமணமான பெண்களே சேலைகளை விரும்பி அணிகின்றனர். கைக்குழந்தை உள்ள பெண்களுக்கு சேலை மிகச் சிறந்த வரப்பிரசாதமாகும்.

நாகரிக உடையை அணிவது போல புடவை கட்டுவது என்பது எளிதான காரியம் அல்ல. ஐந்தரை மீற்றர் நீளமுள்ள புடவையைக் கட்டும்போது சற்றே கவனம் பிசகினாலும் அவிழ்ந்து விழுந்து மானத்தை வாங்கிவிடும். எனவே, புடவை கட்டும்போது சில விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

பெட்டிகோட்டும் ரவிக்கையும் புடவையுடன் இணைந்து அணியக்கூடிய ஆடைகள் ஆகும். அவை மேட்சாக இல்லாவிட்டால் என்னதான் விலையுயர்ந்த புடவை அணிந்தாலும் பாந்தமாக இருக்காது. எனவே, அவற்றிலும் கவனம் தேவை.

வட இந்தியாவில் குறிப்பாக குஜராத்தில் புடவையின் முந்தானை முன்பக்கமாக வருமாறு அணிவார்கள். ஆனால், தென்னிந்தியா உட்பட இலங்கையில் புடவை முந்தானை பின்பக்கம் வருமாறு பார்த்து அணிகின்றனர்.

புடவை கட்டுவதில் முக்கியமானது மடிப்பு எடுத்து கொசுவம் சொருகுவதுதான். முன்பெல்லாம் கிராமத்தில் உள்ளவர்கள் கெண்டைக்கால் தெரிய புடவையை உயர்த்தி கட்டி பின் கொசுவம் வைத்துக் கட்டியிருப்பார்கள். இப்போது கால மாற்றத்திற்கு ஏற்பட அனைவருமே முன்கொசுவம் வைத்து தளர கட்டத் தொடங்கிவிட்டனர். புடவையின் நீளத்திற்கு ஏற்பவே கொசுவ மடிப்பு எடுத்து இடுப்பில் சொருக வேண்டும். சேப்டி பின் பயன்படுத்துவது மிகவும் பாதுகாப்பானது. மீதமுள்ள புடவையை அழகாக மடிப்பு எடுத்தோ அல்லது ஒற்றைத் தலைப்பிலோ இடது தோள் மேல் போட்டு பின் குத்தி விட வேண்டும். முதன் முதலாக புடவை கட்டும்போது அரைமணி நேரமாவது ஆகும். பின்னர் பழகப் பழக ஐந்து நிமிடத்தில் புடவை கட்டிவிடலாம்.

பல இலட்சம் ரூபா பெறுமானமுள்ள பட்டுச்சேலைகள் முதல் சில நூறு ரூபாய் உள்ள கொட்டன் சேலைகள் வரை இந்தியாவில் தயாராகின்றன. பட்டு என்றாலே சட்டென்று அனைவருக்கும் நினைவில் வருவது வாரணாசியும் காஞ்சிபுரமும்தான். பனாரஸ் சில்க் என்று அழைக்கப்படும் வாரணாசி பட்டு உயர்தரமான பட்டு நூலால் தயாரிக்கப்படுகிறது. இவைகளை திருமணம், விழாக்கள் போன்றவற்றிற்கு அணிந்து சென்றால் சிறப்பான தோற்றத்தைத் தரும். காஞ்சிபுரம் பட்டுச்சேலைகளின் முந்தானை வடிவம் உலக அளவில் புகழ்பெற்றது. தமிழகத்தில் பழங்காலத்தில் இருந்தே தயாரிக்கப்பட்டு வரும் இந்த புடவைகள் கையால் நெய்யப்படுவதால் நல்ல தரமாக இருக்கும்.

ஒரிசாவின் 'இக்கத்" சேலைகளில் அதிக கைவேலைப்பாடுகள் காணப்படுகின்றன.நூல் வேலைப்பாடுகள் செய்யப்பட்ட இத்தகைய சேலைகள் பிரபலமானவை. இதில் ஒரேஞ்ச், மஞ்சள் வண்ணங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும். காஷ்மீரின் மொஷிதாபாத் சேலைகள், சைனா சில்க்கை போன்று இருக்கும். இதை பெங்காலி சில்க் என்றும் கூறுவர். காஷ்மீரின் பாரம்பரிய உடையான இதில் காஷ்மீர் வடிவங்கள் நிறைந்திருக்கும்.

ராஜஸ்தான் மற்றும் குஜராத்தில் பந்த்னி சேலைகள் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலும் வெள்ளை நிற சேலைகளே அதிகமாக இருக்கும். அதில் நூல் வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கும். பாத்திக் வகை சேலைகளில் மெழுகு பயன்படுத்தப்பட்டிருக்கும். இந்தச் சேலைகளை அணிந்தால் வட இந்தியத் தோற்றத்தைக் கொடுக்கும். குஜராத் மாநிலத்தில் உள்ள சூரத் புடவைகளுக்குப் பெயர்பெற்ற நகரமாகும். இங்கு கிடைக்கும் புடவைகள் சிறப்பு வாய்ந்தவை.

கர்நாடகாவின் பன்கடி சேலைகள் விலை குறைவானவை. தினமும் பயன்படுத்தும் விதத்தில் இவை இருக்கும். ஆந்திராவின் போச்சம் பள்ளி சேலைகள் அதிக எடை கொண்டதாய் இருக்கும். அந்தளவுக்கு கை வேலைப்பாடுகள் மிகுந்திருக்கும். மங்கல்கிரி சேலைகளும் அங்கு தயாரிக்கப்படுகின்றன. இந்த வகை சேலைகளில் பார்டர் டிசைனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டில் கிடைக்கும் காஞ்சிபுரம் பட்டுபோல கோயம்புத்தூர் கொட்டன் சேலைகளும் பிரசித்தி பெற்றது. பினிஷிங் நன்றாக இருக்கும். சின்னாளபட்டி சுங்குடி புடவைகள் பெண்களின் தோற்றத்திற்கு தனி மதிப்பினைத் தரும். ஆயிரம் ஆடைகள் அணிந்தாலும் சேலை கட்டும் பெண்ணுக்கு என்று தனிவாசம் இருப்பதை புடவையை கட்டிப் பார்த்தால்தான் தெரியும்.



# அசுர வேகத்தால் ஓர் அச்சுறுத்தல்

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் 'ருவென்ரி-20' போட்டிகளிலும் தொடர்ந்து சாதனை படைத்து வருகிறார்.

எதிரணியினரை அச்சுறுத்தும் இவரது பந்து வீச்சு இலங்கை அணிக்கு மிகப்பெரும் வரப்பிரசாதமாகியுள்ளது.

மலிங்கா ஒருநாள் கிரிக்கெட் வ்ரலாற்றில் மூன்றாவது முறையாக 'ஹட்ரிக் விக்கெட் கைப்பற்றிய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மலிங்க மூன்றாவது தடவையாக ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவுஸ்திரேலிய அணியுடனான 5 ஆவது ஒருநாள் போட்டியிலேயே லஷித் மலிங்க இந்த ஹட்ரிக் சாதனையைப் படைத்தார். இதில் இவர் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் ங்கைப்பற்றினார்.

மலிங்க இந்தப் போட்டியின் 46 ஆவது ஓவரில் தனது 8 ஆவது ஓவரை வீசினார். இதன் 2ஆவது பந்தில் ஜோன்சன் (1) போல்டானார். அடுத்த இரு பந்துகளில் ஹாஸ்ரிங்ஸ் (எல்.பி.டபிள்யு.) தோகர்டி (போல்ட்) 'டக் அவுட்டாக ஒருநாள் கிரிக்கெட்டில் 3 ஆவது முறையாக 'ஹட்ரிக்' விக்கெட் கைப்பற்றினார்.

இதற்கு முன்னர் மலிங்க 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக தொடர்ச்சியாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தி உலக சாதனை படைத்ததோடு கடந்த மார்ச் மாதம் கென்யாவுக்கு எதிராக மேலும் ஒரு ஹட்ரிக் சாதனை படைத்தார்.

இதுவொரு புதிய உலக சாதனையாகும். இதற்கு முன் வாஸிம் அக்ரம், சக்லைன் முஸ்தாக், சமிந்த வாஸ் மற்றும் லஷித் மலிங்க ஆகியோர் தலா இரு தடவைகள் ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தனர்.

ஆனால், மலிங்கவின் திறமை ஒவ்வொரு போட்டியிலும் வித்தியாசமாயிருக்கிறது. டெஸ்ட் போட்டியிலிருந்து ஒய்வை அறிவித்த பின்னர் ஒருநாள் மற்றும் ஐ.பி.எல்.போன்ற 'ருவென்ரி-20' போட்டிகளில் சாதனை படைத்து வருகிறார்.

டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் தினமும் சராசரி 25 முதல் 30 ஓவர்கள் என்ற ரீதியில் பந்து வீசுவதால் விரைவில் காயமடைவதையடுத்து அவர் அதிலிருந்து ஒய்வுபெற்று ஒருநாள் மற்றும் 'ருவென்ரி-20' போட்டிகளில் கவனம் செலுத்துகிறார்.

இவரது வித்தியாசமான பந்து வீச்சு முறையும் அதன் மூலம் அவர் வீசும் அதி பயங்கர யோக்கர்கள் மற்றும் பவுன்சர்களும் களத்தில் நிற்கும் துடுப்பாட்ட வீரரை கதிகலங்கச் செய்துவிடுகிறது.

இவர் இப்படித்தான் வீசுவார் என்பது நன்கு தெரிந்தும் அதனை எந்த விதத்தில் எதிர்கொள்ள வேண்டுமென்பது தெரிந்தும் துடுப்பாட்ட வீரர்கள் அவ்வாறான பந்து வீச்சுக்கு ஆட்டமிழந்து விடுகின்றனர். இவரது 'யோக்கர்' பந்தை எதிர்கொள்வதற்கு முன்னரே விக்கெட் சரிந்து விடுகிறது. இதுதான் மலிங்கவின் மிகப்பெரும் பலமாக உள்ளது.

கிறிசை விட்டு வெளியே வந்து மலிங்கவின் 'யோக்கர்' பந்தை புல்டோசாக எடுக்க வேண்டுமென நினைப்பவர்கள் கூட அந்தப் பந்தை எதிர்கொள்ளத் தயாராவதற்குளூ கண்ணிமைக்கும் நேரத்தினுள் மலிங்க எல்லாவற்றையும் முடித்து விடுகிறார்.

இவ்வாறு சர்வதேச ஒருநாள் மற்றும் 'ருவென்ரி-20' போட்டியில் மலிங்கவின் பந்து வீச்சு எதிரணியினருக்கு சிம்ம சொப்பனமாகவே இருக்கிறது. தற்போது மலிங்கவை எதிர்கொள்வது எப்படியென்று ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிலேயே அதிக துடுப்பாட்ட வீரர்கள் கவனம் செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.




## 'இருபதுக்கு -20'லும் சாதனையாளர்

ஐ.பி.எல்.கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் எனும் சாதனைக்குரியவராகியுள்ளார் லஷித் மலிங்க. இவர் இதுவரை 37 போட்டிகளில் பங்குபற்றி 59 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இவ்வருட தொடரில் 11 போட்டிகளில் பங்குபற்றி 26 விக்கெட்டுகளை வீழ்த்தியமையும் மலிங்கவின் மற்றொரு சாதனையாகும்.

2008 இல் பாகிஸ்தானைச் சேர்ந்த சொஹைல் தன்விர்-ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடி 22 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அவ்வருடம் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

2009 இல் டெக்கான் சார்ஜர்ஸ் சார்பில் விளையாடிய ஆர்.பி.சிங் 23 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார். அவரது அணி சுற்றுப் போட்டியை வென்றது.

கடந்த வருடம் வித்தியாசமான ஒரு நிலைமை தோன்றியது. பிரக்யன் ஓஜா அதிகூடிய விக்கெட்டுகளை எடுத்தபோதும் அவரது அணியால் சம்பியனாக முடியவில்லை. சென்னை சுப்ப கிங்ஸ் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் சம்பியனாகியது.

அது போல் இவ்வருடம் மலிங்க அதிக விக்கெட்டுகளை அள்ளியும் மும்பை இந்தியன்ஸால் இறுதியாட்டத்திற்கு வரமுடியவல்லை.

ஐ.பி.எல். இருபதுக்கு 20 போட்டியில் மலிங்க மிகவும் ஆபத்தான பந்துவீச்சாளர் என கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார்.

'அவருக்கு அனுபவம் வந்து விட்டது. அவர் மிகவும் பயங்கரமான 'இருபதுக்கு-20' பந்து வீச்சாளர். அவரது யோக்கர் மிக ஆபத்தானது. பவுன்ஸர்கள் தடுமாற வைப்பவை. அவரது பந்து வீச்சில் பல்வேறு வகைகளைக் காணலாம்' என கில்கிறிஸ்ட் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதம் இந்தியாவில் சாம்பியன் லீக் ஆரம்பமாகவுள்ள நிலையில் லசித்தவின் பந்து வீச்சு மேலும் பெருகேறி வருகிறது.




# ஹீரோக்கள் சீரோக்களாகினர்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி சந்தித்த படுதோல்விக்கு இந்திய கிரிக்கெட் சபையும் (பி.சி.சி.ஐ.) பொறுப்பேற்க வேண்டும். தவறான வீரர்கள் தேர்வு, ஓய்வில்லாத ஐ.பி.எல். போட்டிகள் போன்றவை அணியின் வீழ்ச்சிக்கு வித்திட்டன.

இந்திய, இங்கிலாந்து அணிகள் மோதிய டெஸ்ட் தொடரின் மீது அதிகபட்ச எதிர்பார்ப்பு ஏற்பட்டது. ஏனெனில் நம்பர்-1 இற்கும் நம்பர்-3 க்கும் இடையிலான மோதல் 2000 ஆவது டெஸ்ட் போட்டி என தொடக்கத்திலிருந்தே பதற்றமேற்பட்டது. யார் வெற்றி பெற்றாலும் வித்தியாசம் குறைவாகத்தான் இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், எதிர்பார்ப்புகள் எல்லாம் பொய்யானது. முதல் இரு போட்டிகளில் 196,319 என மிகப்பெரிய வித்தியாசத்தில் இந்திய அணி தோற்றது. அடுத்த இரு டெஸ்டில் இனிங்ஸ் தோல்வியென 0-4 என முழு அளவில் தொடரை இழந்து அவமானத்தைச் சந்தித்தது. இன்று இந்திய கிரிக்கெட் சபை தோல்விக்கான காரணங்களை ஆராய்கிறது.

**இங்கிலாந்து உதாரணம்:** கடந்த ஆண்டு ஆஷஸ் தொடருக்காக இங்கிலாந்து அணி ஒரு மாதம் முன்னதாக அவுஸ்திரேலியா சென்றது. அங்குள்ள சூழலுக்கேற்ப வீரர்கள் மாறிக்கொள்ள முக்கியத்துவம் வாய்ந்த இத்தொடரை 3-1 என இங்கிலாந்து வென்றது. ஆனால், மேற்கிந்திய தொடர் முடிந்த 6 நாள் இடைவெளியில் இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டியில் இந்தியா பங்கேற்றது.



**வியப்பான தேர்வு:** ஓய்வில்லாத போட்டிகளால் வீரர்கள் அதிகம் காயமடைந்தனர். காயத்துடன் அவர்களைத் தேர்வு செய்ததால் ஏற்பட்ட விளைவுகள், இத்தொடரில் உடனடியாகத் தெரிந்தது. முதல் டெஸ்டின் முதல் நாளில் சகீர்கான் காயமடைந்தார். இவருக்குப் பதில் ஆர்.பி.சிங்கை அனுப்பினர். சமீபத்திய தென்னாபிரிக்கத் தொடரில் பங்கேற்ற உனகட், இலங்கையில் மந்தமான ஆடுகளத்திலும் சாதித்த அபிமன்யு மிதுனை விட 3 ஆண்டுகளாக டெஸ்ட் விளையாடாத ஆர்.பி.சிங் தேர்வு ஆச்சரியம் தந்தது.

**சேவாக் குழப்பம்:** தோள் மூட்டுக் காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்த செவாக்கை தோல்வியிலிருந்து அணியைக் காப்பாற்ற அனுப்பினர். காயம் முழுமையாகக் குணமடையாத நிலையில் இப்போது ஒருநாள் தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதே நேரத்தில் இங்கிலாந்து அணியில் டிராவிட்டுக்குப் பதில் போபரா, டிரம்லட்டுக்கு மாற்றாக பிரஸ்னன் என தகுதியான வீரர்கள் சேர்க்கப்பட்டனர்.

**ஐ.பி.எல். காரணம்:** வீரர்கள் இப்படிக் காயமடைவதற்கு ஐ.பி.எல். தொடரைத்தான் எல்லோரும் குற்றஞ்சுமத்துகின்றனர். ஆண்டுக்கு மூன்று மாதங்களை இத்தொடர் விழுங்கிக் கொள்கிறது. இத்தொடரில் காம்பிர், சேவாக், சகீர்கான் ஆகியோர் பணத்துக்காக முழுஅளவில் பங்கேற்றது இப்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

**அதிர்ச்சித் தகவல்:** இந்திய அணிக்காக விளையாடியதைவிட ஐ.பி.எல். அணியில் பங்கேற்கும்போது அதிக நெருக்கடி இருந்தது என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கும்பிளே வெளியிட்ட செய்தி அதிர்ச்சி தந்தது. இதனால்தான் 11.66 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்ட கம்பிர், காயத்துடன் ஐ.பி.எல். அரையிறுதியில் பங்கேற்க நேர்ந்தது. இதுபோன்ற சர்ச்சை 2009 ருவென்ரி-20 உலகக் கிண்ணத் தொடரின்போதும் ஏற்பட்டது.

பல்வேறு காரணங்களுக்காக ஐ.பி.எல். தொடர் சிறப்பானதாக இருந்தாலும் இதை முறைப்படுத்த வேண்டிய கட்டாயம் பி.சி.சி.ஐ.க்கு ஏற்பட்டுள்ளது. குறைந்தபட்சம் வீரர்களை விளையாடும்படி கட்டாயப்படுத்தக்கூடாது.

**இனி சிரமம்:** உலகக் கிண்ணத்தை வென்ற குறுகிய காலத்தில் கிடைத்த அதிர்ச்சியான தோல்வியிலிருந்து விரைவில் மீள வேண்டும். சகீர்கானுக்கு மாற்று வீரர் தரமான சுழற்பந்து வீச்சாளர்களைக் கண்டறிய வேண்டும். சச்சின், டிராவிட், லட்சுமண் போன்ற சீனியர்கள் ஓய்வுபெறவிருக்கும் நிலையில் இவர்களுக்குப் பதில் சரியான வீரர்களை தேடிப்பிடிக்க வேண்டும். இவற்றை முன்னதாகச் செய்திருந்தால் இங்கிலாந்து தொடரில் தோல்வி கிடைத்திருக்காது. இனிமேலும் பி.சி.சி.ஐ. பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்றால் பிறகு வெற்றி என்பது எட்டாக்கனியாகிவிடும்.

# சத்தமின்றி சரணடைவு

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்கள் பெரியளவில் எவ்வித எதிர்ப்புமின்றி சரணடைந்தது வியப்புத் தருவதாக இந்திய அணியின் முன்னாள் கப்டன்கள் கவாஸ்கர், ரவி சாஸ்திரி உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்தது. இதில் ஓவல் மைதானத்தில் நடந்த கடைசிப் போட்டியில் சச்சின், அமித் மிஸ்ரா இருவரும் துணிச்சலான போராட்டத்தை வெளிப்படுத்தி டிரா செய்யப் போராடினர். இருப்பினும் மற்ற வீரர்கள் ஏனோதானோ என்ற ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் இனிங்ஸ் தோல்வியடைய நேரிட்டது. இது குறித்து முன்னாள் வீரர்கள் கூறியதாவது;

**கவாஸ்கர்:** இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முடிவு பெரும் ஏமாற்றம் தருகிறது. இரண்டு சிறந்த அணிகள் பங்கேற்ற நிலையில், இத்தொடர் சிறப்பானதாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இந்திய வீரர்கள் மிகமோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி எவ்வித எதிர்ப்புமின்றி சரணடைந்தனர்.

இது நம்பர் -1 அணிக்கு அழகல்ல. தரவரிசையில் முதலிடத்திலிருக்கும் அணிகள் பொதுவாகக் கடைசிவரை போராடி சிறிய வித்தியாசத்தில் தான் தோற்கும். இப்படி மிகப் பெரியளவில் தோற்கடிக்கமாட்டார்கள். ஒருவேளை இந்திய வீரர்களின் அணுகுமுறைகள் தவறாக இருந்திருக்கலாம்.

**ரவி சாஸ்திரி:** இந்திய அணியின் தோல்விக்கு முக்கிய வீரர்களின் காயங்கள், போர்ம் இல்லாதது எனப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஆனால், இந்தத் தோல்வியிலிருந்து உடனடியாக விழித்துக்கொள்ள வேண்டும். இதற்காக கண்டிப்பான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

டெஸ்ட், ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 என மூன்று வகையான போட்டிகளுக்கும் தனித்தனியாகக் குறிப்பிட்டளவு தரமான வீரர்களை எப்போதும் வைத்திருக்க வேண்டும். வீரர்களின் பழைய சாதனைகளை எப்போதும் பேசிக்கொண்டு தேர்வு முடிவுக்கு வரக்கூடாது. இவற்றைச் சரியாகப் பின்பற்றினால் அடுத்த 6 முதல் 8 மாதங்களில் இந்திய அணி வெற்றிப்பாதைக்கு திரும்பலாம்.

**சஞ்சய் மஞ்ச்ரேக்கர்:** லட்சுமண் போன்றவர்கள் ஒரு திறமையை மட்டும் வைத்துக்கொண்டு அணியில் காலம் தள்ள முடியாது. தென்னாபிரிக்காவில் ஸ்ரீசாந்த் செயல்பாட்டினைப் பார்த்த பின் சகீர்கானுக்கு மாற்றாக நல்ல வீரரைக் கண்டறிய வேண்டுமென நினைத்தேன். இங்கிலாந்து தொடரில் ஸ்ரீசாந்த்துக்கு மீண்டும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், மிகச் சாதாரணமான பந்து வீச்சை வெளிப்படுத்தியது பெரும் ஏமாற்றமாக இருந்தது.

**வெங்சர்க்கார்:** வெளிப்படையாகச் சொல்வதென்றால் இது இந்திய அணிக்குக் கடினமான தொடர். சமீபகாலமாகத் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திவரும் அஞ்சத்தக்க அணியுடன் தான் இந்தியா மோதியது. என்னைப் பொறுத்தவரையில் கடைசி சில இனிங்ஸ்களில் இந்திய வீரர்கள் சற்றுச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது ஆறுதலாக இருந்திருக்கும்.

## உலக வலம்

ச.துஷ்யந்தினி

# கடாபிக்கு பின்னரான லிபியா எதிர்நோக்கவுள்ள சவால்கள்

லிபியப் போரும் அதன் கதாநாயகன் முஅம்மர் கடாபியின் சகாப்தமும் முடிவுக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆறு மாதங்களாக கடாபியின் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் இடம்பெற்று வந்த போர் இவ்வார முற்பகுதியில் அதன் உச்சத்தை எட்டியிருந்தது.

கடந்த பல வாரங்களாக ஸ்தம்பிதமடைந்திருந்த கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றம் இரு வாரங்களில் கடாபியின் கோட்டையாக விளங்கும் தலைநகர் திரிபோலிக்குள் நுழையும் அளவுக்கு சடுதியாக அதிகரித்திருந்தது.



நேட்டோவின் வான் தாக்குதல் உதவியுடன் இரு வாரங்களில் கடாபியின் படைகள் வசமிருந்த பல பகுதிகளைக் கைப்பற்றித் தொடர்ச்சியாக முன்னேறி வந்த கிளர்ச்சியாளர்கள் தற்போது திரிபோலிக்குள் நுழைந்துள்ளனர்.

டியூனீசியா, எகிப்து போன்ற அரபுலகக் கிளர்ச்சிகளின் தொடர்ச்சியாக கடாபியின் 42 வருட கால ஆட்சிக்கு எதிராக மேற்குலகின் ஆதரவுடன் கடந்த பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட உள்நாட்டுப் போரும் கடாபியின் சூளுரைகளும் கடாபியைப் பதவியிலிருந்து அகற்றுவதில் மேற்குலகம் காட்டிவரும் முனைப்புகளும் உலக வலத்தில் முன்னர் விரிவாக ஆராயப்பட்டது.

தற்போது போர் திரிபோலியில் உச்சகட்டத்தை அடைந்திருக்கும் நிலையில், நகரின் பெரும்பகுதி தமது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக இரு தரப்புமே பரஸ்பரம் உரிமை கோரி வருகிறது.

ஆனால் கள நிலைவரங்கள் அடிக்கடி மாறிக் கொண்டிருப்பதால் எதனையும் உறுதிபடக் கூற முடியாத நிலையும் காணப்படுகிறது.

கடாபியின் மூன்று மகன்மார்களையும் கைதுசெய்து தடுத்து வைத்திருப்பதாக கிளர்ச்சியாளர்கள் கூறியிருந்த நிலையில் அவர்கள் தப்பித்து விட்டதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் எவ்வாறு கைது செய்யப்பட்டார்கள்? எவ்வாறு தப்பித்தார்கள் என்பது தெளிவுபடுத்தப்படாத அதேவேளை, கடாபியின் இருப்பும் தொடர்ந்தும் மர்மமாகவே உள்ளது.

கடாபி தொடர்ந்தும் லிபியாவிலேயே இருக்கிறாரென சில செய்திகளும் ஆபிரிக்க ஒன்றியத்தின் அனுசரணையுடன் அவர் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாக வேறு சில செய்திகளும் தெரிவிக்கின்றன.

போர் நிலைவரங்கள் இவ்வாறிருக்க கடாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் நாட்டை ஒன்றிணைக்கக் கூடியவர் யாரென்பதே தற்போது அரசியல் வட்டாரங்களில் விவாதிக்கப்படும் முக்கிய விடயமாகியுள்ளது.

இப்போரில் பல்வேறு கிளர்ச்சிக் குழுக்கள் பங்குபற்றியிருக்கும் நிலையில் கடாபியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் லிபியாவை ஒன்றிணைத்து வழிநடத்தக் கூடியவர் யார்? என்ற கேள்விக்கு எவருமில்லை என்பதே பல்வேறு தரப்பாலும் அளிக்கப்படும் பதிலாக உள்ளது.

ஒவ்வொருவராலும் மதிக்கப்படக்கூடிய தலைவராக கிளர்ச்சியாளர்களின் தலைமைத்துவத்தில் எவருமில்லை என்பதே லிபியா எதிர்நோக்கவுள்ள அடுத்த பிரச்சினையாகும்.

சம்பிரதாயபூர்வமான ஒரு முறைமையின் கீழேயே கடாபி நாட்டை வழிநடத்தி வந்தமையால் அதிகார மாற்றத்தை இலகுவாக்கக் கூடிய எந்தவொரு அரச நிறுவனங்களும் இங்கில்லை.

இது தவிர லிபிய சமூகம் இனம், கொள்கைகள் மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகள் என்பவற்றின் அடிப்படையிலும் பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இவற்றுள் முன்னாள் அரசாங்க அமைச்சர்கள், அரேபிய தேசியவாத நிலைப்பாடுகளைக் கொண்ட எதிரணி உறுப்பினர்கள், இஸ்லாமியவாதிகள், மதச்சார்பற்றவர்கள், சமவுடைமைவாதிகள் மற்றும் தொழிலதிபர்கள் என்போர் முக்கியமானவர்கள்.

இவர்களில் தற்போதைய கிளர்ச்சியாளர்களின் தேசிய அதிகார மாற்றத்திற்கான சபையின் தலைவராக விளங்கும் முன்னாள் நீதியமைச்சர் முஸ்தபா அப்துல் ஜலில் முன்னணியில் உள்ளார்.

இணக்கப்பாட்டைக் கட்டியெழுப்பும் ஆற்றலைக் கொண்டவராக வர்ணிக்கப்படும் ஜலில் (வயது 50), ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வன்முறைகள் மீது பிரயோகிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரியில் கடாபியின் அரசிலிருந்து பிரிந்து கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து கொண்டார்.

ஆனால்,கடாபியின் அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்களைத் தொடர்ந்தும் சந்தேகக்கண்ணோடு பார்க்கும் கிளர்ச்சியாளர்களுக்குள் இருக்கும் சில பிரிவினர் கடாபியின் அரசுடன் எவ்வித தொடர்புமற்ற புது முகங்களையே முக்கிய பதவிகளில் அமர்த்த விரும்புவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், கடாபியை நீண்டகாலமாக எதிர்த்து வந்தவர்களுக்கும் அண்மையில் அவரிடமிருந்து விலகியவர்களுக்குமிடையே தொடர்ந்தும் நிலவிவரும் பதற்றம் ஆக்கபூர்வமான தலைமைத்துவமொன்றைத் தெரிவு செய்வதற்கான முயற்சிகளை சீர்குலைக்குமென அஞ்சப்படுகிறது.

இந்த நிலைமை நீடித்தால் சதாம் ஹுசைனின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஈராக்கில் இன்றுவரை நீடிக்கும் அரசியல் ஸ்திரமின்மையையே லிபியாவும் எதிர்கொள்ள நேரிடுமென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது நாட்டை மீளக் கட்டியெழுப்பும் முயற்சிகளிலும் சக்தி வளத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அண்மையில் கடாபியிடமிருந்து கிளர்ச்சியாளர்களுடன் இணைந்துகொண்ட மேலும் சில அமைச்சர்களான மஹ்மூட் ஜிப்ரில், அலி, கர்கோனி மற்றும் சோக்ரிகனம் போன்ற தலைவர்கள் கல்விப் புலமையையும் ஆளுமைத் திறனையும் பல்துறை அனுபவத்தையும் கொண்டுள்ளனர்.

ஆனால், கடாபியுடன் பணிபுரிந்தவர்கள் தம்முடன் பணிபுரிய முடியாதென்ற கிளர்ச்சியாளர்களின் கொள்கைகள் இவர்களது ஆற்றலைப் பயன்படுத்த முடியாத நிலையைத் தோற்றுவித்து விடுமோ என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளது.

கடாபியின் ஆட்சிக்கு முடிவு கட்டுவதற்காக ஒன்றிணைந்து போராடினாலும் கிளர்ச்சியாளர்களுக்கிடையிலும் பல்வேறு பிளவுகள் உண்டாகியுள்ளன.

இதற்கு கிளர்ச்சியாளர்களின் இராணுவத்தளபதி அண்மையில் மற்றொரு இஸ்லாமியக் குழுவால் சுட்டுக்கொல்லப்பட்டதும் இவர் கொல்லப்பட்ட சூழ்நிலை தொடர்ந்தும் மர்மமாக வைக்கப்பட்டுள்ளதும் சிறந்த உதாரணமாகும்.

கிளர்ச்சியாளர்களுக்குள் உள்ளடங்கியிருக்கும் இஸ்லாமியவாதிகள் புதிய லிபியா மேற்குலகுடன் நெருக்கமான உறவை வளர்ப்பதை நிராகரிக்கும் அதேவேளை, ஏனையோர் வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதில் ஆர்வமாக உள்ளனர்.

இதேவேளை, கிளர்ச்சிக் குழுக்களைப் பிரதிநித்துவப்படுத்துபவர்களில் பெரும்பான்மையோர் நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவர்கள்? எந்தக் குழு கூடுதல் ஆயுத விநியோகத்தை மேற்கொண்டது? எந்தக் குழுக்களுக்கு புதிய அரசில் அதிகாரம்மிக்க பதவிகளை வழங்குவது என்பது தொடர்பிலும் கடும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

எனவே, அதிகாரப் போட்டியிலும் கிளர்ச்சியாளர்களுக்கிடையில் பல்வேறு பிளவுகள் ஏற்படலாமெனக் கருதப்படுகிறது.

கிளர்ச்சியாளர்களைப் பொறுத்தவரை நாட்டை நிர்வகிப்பது மிகவும் கடினமானதொன்றாக இருக்கப் போகும் அதேவேளை, ஒவ்வொருவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவரொருவரைத் தெரிவு செய்வது மிகப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.

லிபிய நிலைவரத்தின் யதார்த்தத்தை உற்றுநோக்கும்போது ஆளுமை மிக்க தலைமைத்துவமொன்றைத் தெரிவு செய்வது இலகுவாக இருக்கப் போவதில்லை என்பதே பெரும்பாலான அவதானிகளின் கருத்தாகும்.

280811-1.indd 23
Process Magenta














இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

280811-1.indd 24